625

1803. Vol. I. No. 11.

28 JUL 1924

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

சுகிர்தாஞ்சனம்

சரீரத்தில் உண்டாகும்
கீழ்க்குறித்த வியாதிகளை வெகு
சீக்கிரத்தில் ஆச்சரியமாய்
முற்றிலும் குணமடையச்
செய்யும்.

தலைவலி
வாதரோகம்
கீல்வாய்வு
களுக்கு
காயப்புண்
இடுப்புவலி
சுவாசகாசம்
ஒற்றைதலை
நோய்

தமனிய
காசம்
பல்வலி
வீக்கம்
இருமல்
விஷகடி
வெட்டுக்
காயம்
முதலியன.

விலை அணா 7

விற்குமிடங்கள் :—பம்பாய், கல்கத்தா, சென்னை.

ஏஜன்ஸி விஷயங்கட்கும், மொத்த விலைகட்கும் எழுத வேண்டிய விலாசம் :—

சுகிர்தாஞ்சனம் டிபோ,

3-187, மவுண்டு ரோட்,

சென்னை.



விச்ராந்த கட்டம், மதுராபுரி.

28 JUL 1924

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க.	ரக்தாட்சி௵ ஆனிமீ 1924 ஜூன்	இதழ் ௰க

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி 519
2. உறுதி கூறல் 520
3. சுதேசி தர்மம் 521
4. தொண்டும் தொண்டரும் 525
5. கடவுள் எங்கும் இருக்கிறார் ... 529
6. ஸ்ரீகம்பராமாயணம் அயோத்தியா காண்டம் உரை 534
7. நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும் ... 538
8. ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் 542
9. நங்கையின் நிருபம் 546
10. கதிர்காமம் 553
11. முரசொலி 554
12. சந்தாதாரர்களுக்கு ஒரு விண்ணப்பம் ... 559
13. விசேஷக் குறிப்புகள் 560

சித்திரப் படங்கள்.

1. விச்ராந்த கட்டம், மதுராபுரி.
2. தேசியக்கவி சுப்ரமண்ய பாரதியார்,

ஆவணக் காப்பக நூலகம்
210339

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2.
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2-8.
உயர்ந்த பதிப்பு (Art Paper)	... ...	ரூ. 10

தனிப்பிரதி 4 அணா.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 20. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி இங்கிலீஷ் மாதம் மூன்றவது வார முடிவில் நமது சஞ்சிகை வெளிவரும்.

மானேஜர்.

சந்தா நேயர்களுக்கு!

நமது 'லக்ஷ்மி'க்கு சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டு நமது ஏஜன்று ஸ்ரீமாந் **A. M. G.** நாயுடுவை மதுரைக்கு அனுப்பி யிருப்பதால், நமது சந்தாநேயர்கள் அவருக்கு வேண்டிய உதவி செய்வதோடு புதியசந்தாதாரர்களை சேர்த்து கொடுக்கவும் வேண்டுகிறோம்.

ஒரு விண்ணப்பம்.

நமது விளம்பரக்காரர்களுக்கு எழுதும்போது நமது சந்தா நேயர்கள், தயவுசெய்து 'லக்ஷ்மி'யின் பெயரைக் குறிப்பிட்டு எழுதவும்.

மானேஜர், "லக்ஷ்மி."

ஓம்

லக்ஷ்மி துதி

வழுவற்ற செந்தமிழ்ப் பாட
லனேகம் வழங்குமவர்
குழுவிற்கும் வேட்கை பொன்
மேலன்றி வேறில்லை கோக்க
எழுதுற்ற கேதனத் தென் [னுழன்
பெருமான் மனையீகையதால்
தொழுதிட் டவளைப் பலவாறு
நாளும் துதிக்கை நன்றே.

உறுதி கூறல்

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே (1)

எவ்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்றென்றறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதவுடம் பழிந்திடில் என்புரிவீர்
அழியுடம்பை அழியாமை ஆக்கும் வகை அறியீர்
உய்வகைஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே (2)

பொய் விளக்கப் புகுகின்றீர் போது கழிக்கின்றீர்
புலைகொலைகள் புகுகின்றீர் கலகல என்கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொருபாழ்ங் கிணற்றில் விழுகின்ற
களியர் எனக் களிக்கின்றீர் கருத்திருந்தும் கருதீர்
ஐவிளக்கும் மூப்புமர ணாதிகளை நினைத்தால்
அடிவயிற்றை உருக்காதோ கொடிய முயற்றுலகீர்
மெய்விளக்க எனது தந்தை வருகின்ற தருணம்
மேவியதீண் டடைவீரேல் ஆவிபெறு வீரே. (3)

கனம் உடையேம் கட்டுடையேம் என்று நினைத் திங்கே
களித்திறுமாந் திருக்கின்றீர் ஒளிப்பிடமும் அறியீர்
சினம் உடைய கூற்றுவரும் செய்தி அறியீரோ
செத்தநும தினத்தாரைச் சிறிதும் அறியீரோ
தினகரன்போல் சாகாத தேகம் உடையவரே
திருஉடையார் என அறிந்தே சேர்ந்திடுமின் ஈண்டே
மனமகிழ்ந்து கேட்கின்ற வரமெல்லாம் எனக்கே
வழங்குதற்குத் தனித்தந்தை வருதருணம் இதுவே.(4)

(அருட்பா)

சுதேசி தர்மம்

ஸ்ரீமாந் எஸ். மகாதேவய்யர் மொழி பெயர்த்தது

I

ஈச்வரன் எப்பொழுதும் மனிதனாகத் தான் அவதரித்து உலகை இரக்ஷிப்பா ரென்பது ஒரு சட்டமன்று. மீனாகவும், ஆமையாகவும் வந்து பூலோகத்தைக் காப்பாற்றக்கூடிய தெய்வம் பூமியெங்கும் பரவி யிருக்கும் படியான அருபியாகவும் உலகை உத்தாரணம் செய்யக் கூடும். உலகத்தின் அவசியத்திற் கேற்றபடி, அல்லது ஏதாவது ஒரு தேசத்தின் பிரத்தியேக அவசியத்தை முன்னிட்டாவது சில சமயங்களில் போக சுகங்கள் பரவுகின்றன; சில சமயங்களில் த்யாகம் செய்யக் கூடிய புத்தி தேச மெங்கும் பரவுகிறது. இந்த மாதிரி ஸ்திதியை எங்கும் பரவச் செய்கிறதற்குக் காரணமாயிருப்பதை யுக தர்மம், ஸாக்ஷாத் பகவானுடைய கட்டளை, அவரது திருவிளையாடல் என்றாவது, அல்லது மற்றெவ்வாறு கூறினாலும் சரி, அதை அவதார மென்று நாம் அங்கீகரிக்கவேண்டும். எப்பொழு தெல்லாம் மானிடருக்குள்ள துன்பங்களை நீக்கி அவருக்குள் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டி யிருந்ததோ, அப்பொழு தெல்லாம் அநேக த்யாக மூர்த்திகள் தோன்றி அவர்களுடைய குல தர்மம், ஜாதி தர்மம், கோத்ர தர்மம் முதலியவைகளைக் கவனியாது யாவரும் சுகமாக வாழும் பொருட்டு நல்ல இராஜ்யங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். அந்தக் காலங்களில் இப்படி யாவற்றையும் த்யாகம் செய்வது யுக தர்மம். மற்றும், அவர் (கடவுள்) மனிதனுடைய புத்தியை விசாலமாக்கி, கஷ்ட மேற்பட்ட பொழுது அதைப் பலவிதமாகவும் போக்கி யிருக்கிறார். ஒரு நல்ல இராஜ்யத்தை ஸ்தாபிப்பதே கடவுளுடைய எண்ணமா யிருந்தாலும், அதை ஸ்தாபிப்பவர் ஈச்வராம்சமாக இருக்கவேண்டியதில்லை. யார்மூல மாக வாவது தன் எண்ணத்தைக் கடவுள் பூர்த்தி செய்து கொள்ளுகிறார்.

ஆனால் இப்பொழுது இராஜாங்கத்தினுடைய காலம் அடியோடு போய்விட்ட தென்று தெரிகிறது. ஜெர்மனி இராஜ்யம் மண்ணாய்ப் போய் விட்டது. ருஷியா தேசம் கணக்கற்ற தூள் தூளாய்ப் போய் விட்டது. ஆஸ்ட்ரியா தேசம் இனித் தலை காட்டா வழியை யடைந்து விட்டது, துருக்கி இராஜ்யம் அல்லோல கல்லோலப் பட்டுக் கிடக்கிறது. நாம் சிறு குழந்தையாயிருந்த பொழுது பூகோளப் படத்

தில் எங்கும் இராஜாங்கங்கள் காணப்பட்டன. அப்பொழுது அமெரிக்கா, பிரான்சு, ஸ்விட்ஸர் லண்ட் தான் குடியரசா யிருந்தன. ஆனால் இப்பொழுது எங்கு பார்த்தாலும் குடியரசாகவே யிருக்கிறது. ஏகாதிபத்ய முள்ள இராஜாங்கம் இப்பொழுது பொய் எனப் போய் விட்டது. ஏகாதி பத்யத்தைக் காட்டுவதற்கு இனி இங்கிலாண்டையும் ஜபானையும் தவிர வேறொன்று மில்லை. அரசு தொலைந்து விட்டது. ஸ்வய நிர்ணயம் என்ற தொனியே ஆகாய மெல்லாம் பரவி யிருக்கிறது. இப்புது முறைக்குப் பெயர் கொடுத்தது பிரஸிடண்டு வில்ஸன் என்பவர்; ஆனால் அவருக்கு இதைப் போஷித்து உன்னத பதவிக்குக் கொண்டுவர சக்தியிருக்கிறதா வென்பது சந்தேகந்தான். பிரிட்டீஷ் இராஜாங்கமும் ஸ்வய நிர்ணய ஸித்தாந்தத்தை ஆமோதித்த தென்றாலும், அத்தேசம் இம்முறையை வழக்கத்தில் கொண்டுவரு மென்று நாம் எண்ணவில்லை. ஆனாலும், ஸ்வய நிர்ணயம் இக்காலத்தின் கோல மென்பதும், ஒவ்வொரு தேசமும் தன்தன் ஜெயக் கொடியை நாட்டுவதற்கு இதுதான் தகுந்த கருவி யென்பதும் திண்ணம்.

'ஸ்வய நிர்ணயம்' உலகத்தின் போக்கை முற்றிலும் மாற்றி விடக்கூடியதாக விருந்தாலும், நாம் இதை ஒரு அவதாரமாக மிகவும் புகழ்ந்து பேசவில்லை. சூரிய னுதிப்பதற்குமுன் ஆகாயம் எப்படி சிவப்பாகக் காணப்படுகிறதோ, ஏசுநாதர் அவதரிப்பதற்குமுன் "ஜான் தி பாப்டிஸ்ட்" என்பவர் வந்து அம்மஹான் வரவை எப்படி எச்சரிக்கை செய்தாரோ, அதே மாதிரியே இந்த ஸித்தாந்தம் சமீபத்தில் உண்டாகப் போகிற அவதாரத்தைப் பற்றி முன் எச்சரிக்கை செய்கிறது: அதென்ன வென்றால், சுதேச தர்மத்தைக் கைக்கொள்ள பூமி தயாராய்க் கொண்டிருக்கிறது. தேசாபிமானத்தின் காரணமாக உள் நாட்டுத் துணியை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரும் பொருட்டு ஜனங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியை நாம் யுக அவதாரமாக மதிக்கையில் நம்மைப் பார்த்து இதைப் படிப்பவர்களில் சிலர் சிரிக்கலாம். ஆனால் இது ஆச்சரியப்படக்கூடியதோ அல்லது நகைக்கப்படக் கூடியதோ அல்லது அசட்டையாக தள்ளிவிடப்படக் கூடியதோ வான சங்கதியில்லை. "சுதேசி" உலக மெங்கும் சமாதானத்தை உண்டாக்கக் கூடிய ஒரு ஸாத்வீக தர்மம். இதனாலேதான் எல்லோருக்கும் நன்மையுண்டாகும். இதனாலேதான் இப்பொழுதிருக்கும் சண்டை சச்சரவு ஒழியும். இந்த ஸித்தாந்தத்தின் மஹிமையினால் பூலோகத்தில் 'தன்னயம்' என்பது அழியும். மேலும், ஜனங்களுடைய நோக்கம் விசாலமாகவும் களங்க மற்றதாகவும் மாறும். இந்த ஸித்தாந்தத்தின் அடையாளமாக மனிதர்களுடைய மனோரதம் மாறும். மேலும் சுதேச ஸித்தாந்தந்தான் மலையாகக் கிடக்கிற அஹங்காரத்தைத் தூள் தூளாக்கி மானிட ஜாதிக்கு மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியது. ஆனது பற்றியே நாம் இதை ஒரு அவதாரமாக மதிக்கிறோம். இப்பேர்ப்பட்ட தத்வத்திற்கு ஆதாரமாக எது

இருக்கிறதோ அது இதற்கு தகுந்தபடி பலமாக விருக்கவேண்டும். ஆனால் எல்லாவிதத்திலும் சுதேசியைக் கைப்பற்று வதற்கு நம் பாரத நாட்டிற்குத் தகுந்த சக்தி இப்பொழுது இல்லாததால் சுதேசி ஸித்தாந்தம் இப்பொழுது வாமன ரூபமாக இருக்கிறது: அதாவது, உடையைப் பற்றின மட்டுந்தான்.

ஹிந்து தர்மத்தில் சுதேசி தர்மத்தைப் பற்றிச் சொல்லி யிருக்கு மிடத்தில் ஸ்வதர்மத்தைப்பற்றியும் சொல்லி யிருக்கிறது. சுதேசி ஸித்தாந்தத்தை அனுசரித்தே உலகம் நடந்து வரும் படி கடவுள் செய்திருக்கிறார். இவ்வுலகம் ஒரு சட்டத்தை அனு சரித்தே வருகிறது. ஆனால் சுதேசியைப் போற்று வோன் உலகம் தப்பிப்போய் விட்ட தென்றும் தான் அதை சரியான மார்க்கத் திற்குக் கொண்டுவர வேண்டு மென்றும் நினைக்க மாட்டான். ஈச்வர னுடைய கட்டளைப்படி உலகம் நடந்து வருகிற தென்றும், அது அவ்வாறு இனிமேலும் நடந்து வருமென்றும் சுதேசி தர்மம் சொல் கிறது. ஆல் செழித்து வளர்வது அரசனுடைய காரியமல்ல; ஆட்டுக்குட்டி முன்னுக்கு வருவது ஓநாயினது வேலையல்ல; எலிக்கு உபகாரம் செய்வது பூனையுடைய வேலையன்று; அதே மாதிரி ஒரு தேசத்தாருக்கு மற்றொரு தேசத்தார் முழு நல்லெண்ணத்தோடு உதவி செய்தாலும் அது ஹிதமான தல்ல. நாம் எந்தக் காலத்தில் பிறந்து அதற்கு, தகுந்தவாறு நடந்து வருகிறோமோ, அதுபோல, நாம் எந்த தேசத்தில் பிறந்திருக்கிறோமோ அந்த தேசத்திற்கே யன்றி வேறு தேசங்களுக்கு நாம் சேவகம் செய்யக்கூடாது. இதுவும் சுதேசி ஸித்தாந்தமே. எப்படி ஒரு போர்வீரன் தன் சேனையின் நன்மையின்பொருட்டு, மற்ற போர்வீரர்கள் என்ன செய்கிறார்க ளென்பதைக் கவனியாமல், தன்காரியத்தை ஊக்கமாகச்செய்கிறானோ அப்படியே சுதேசி விரதம் பூண்டவன் உலக வியாபகமாயிருக்கும் சஹோதர ஒற்றுமையை உணர்ந்து, தான் பிறந்த நாட்டின்பொருட் டும் காலத்தின்பொருட்டும் தன்னுடைய காரியத்தைச் சரிவரச்செய் கிறான். சுதேசி தர்மம் பதிவிரதா தர்மத்தை ஒத்ததாகும். எப்பேர்ப் பட்ட கஷ்டம் நேரிட்ட போதிலும் ஒரு பதிவிரதை தன் கணவ னுடனிருந்து அவனுக்குத் தன்னாலியன்றமட்டும் சுகத்தை ஊட்டு கின்றதுபோல, சுதேசிவிரதம் பூண்டவன் எந்தக் காலத்திலும் தன் னுடைய தர்மத்தை விட்டுவிடாமல் அதை மிக அன்புடன் ஆதரிக் கிறான். அவன் தன்னுடைய பாஷையை விருத்தி செய்கிறான், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் அதைத் தான் கற்பிக்கிறான். அவன் தன் நாட்டு ஐதிகங்களின் படியே மோக்ஷத்தைத் தேடுகிறான். தன் ஜாதி மதங்களிலிருக்கும் தீங்குகளைப் போக்குவதற்காக இராப்பக லாய் உழைத்துத் தன் கடமையைச் செய்வது தான் வாஸ்தவமான தெய்வபக்தி யென்று காண்பிக்கிறான். பதிவிரதா தர்மம் எவ்வளவு புண்ணிய மானதோ, அவ்வள புண்ணிய மானது சுதேசி தர்மமும். விவஸாயம் செய்து வருகிற ஒரு உத்தம புருஷன் தன் வயலில் விளைந்த தானியத்தை விற்று விட்டு, தான் சாப்பிடு வதற்கு கடையி

விருந்து தானியம் வாங்க மாட்டான். தன்னுடைய தானியம் நன்றாயிராவிட்டாலுங் கூட, அடுத்த அறுவடையிலாவது தனக்கு நல்ல விளைச்சலுண்டாக வேண்டுமே யென்று நாள் முழுவதும் கவலையுடன் வெகு கஷ்டப்பட்டு வேலை செய்கிறான். ஆனால் தன் வயலில் நல்ல தானியம் விளைகிறவரையில் அவன் பிறரிட மிருந்து விலைக்குத் தானியம் வாங்கிச் சாப்பிடுகிற தில்லை. இதைப் போல, சுதேசி விரதம் பூண்டவன் இரண்டு பைஸாவுக்கு ஆசைப் பட்டு தன்னூரிலிருக்கும் சாமான்களை விட்டு அயலூரிலிருக்கும் அதே சாமான்களைக் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன வென்று வாங்க மாட்டான்.

ச்ரேயன் ஸ்வதர்ம விகுண ஹ : பரதர்மோ பயாவ்ஹ :

ஸ்வே ஸ்வே கர்மண்ய பிரதஹ : ஸம்ஸித்திம் லபேத நரஹ :

அதாவது :—நல்ல குணங்கள் தன் தர்மத்திலில்லா விட்டாலுங் கூட ஒருவன் தன் தர்மத்தைத்தான் செய்ய வேண்டும். பரதர்மம் நல்லதாக விருந்தாலும் அது ஆபத்து விளைவிக்கும். எவனொருவன் தன் கடமைகளைச் சரிவரச் செய்கிறானோ அவன்தான் உன்னத நிலை மைக்கு வரக்கூடியவன்.

இதுதான் சுதேசி தர்மத்தின் மூலமந்திரம்.

(தொடரும்)

உஷக்காலமாய் உதய மலையில் சூரியன் உதயமாகின்றான். பக்ஷிகள் பாடி ஆடுகின்றன. புத்துயிர் அமிர்தம் அளாவி புனித மான காற்று வீசுகின்றது. உன்னுடைய கருணையான அருணராகத் தினால் தூங்கி யிருக்கும் பாரதம் விழிக்கட்டும் :—ஸ்ரீ ரவீந்தரர்.

*　　*　　*　　*　　*

நான் தேசம் முன்னேற்றம் அடையும் என்ற நம்பிக்கையி னால் கஷ்டத்தை ஸுகமாகவும் சாந்த மாகவும் தைரியமாகவும் சகிப்பேன் :—ஸ்ரீ திலகர்.

*　　*　　*　　*　　*

நன்மையாக உள்ளதை மந்தமாக செய்வதனால் அவனுடைய மனம் தீமையில் மகிழ்வுறுகின்றது :—

*　　*　　*　　*　　*

ஜலத்தின் துளிகள் விழுவதினாலேயே ஒரு ஜலபாத்திரம் நிறைந்திருக்கிறது. ஒரு மூடன் தீமையை சிறிது சிறிதாக சேர்ப் பதனாலேயே தீமை நிறைந்தவனாகின்றான் :—

தொண்டும் தொண்டரும்

ஸ்ரீமாந் ரா. அநந்த கிருஷ்ணன் எழுதியது.

முந்தின வியாசத்தில் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையுமே தொண்டு எனக் கருதலாமாயினும், இன்றைய இடம் பொருள் ஏவல் களைக் கவனிக்க தேசத்தின் பொருட்டுச் செய்யப் படும் பணியையே, தொண்டெனக் கூறவேண்டும் எனச் சொன்னோம். அதனையடுத்து, தொண்டரும்; தேசத் தொண்டரையே சிறப்பாகக் கூற வேண்டும். முன் நாளில் சமயத் தொண்டரை அடியார்கள் என்றும் தொண்டர்கள் என்றும் கொண்டாடி வந்தோம். ஆனால், தெய்வத்தையே கட்டோடு மறந்து ஒழுகும் ஒரு அரசியலில் * நாம் வாழ நேர்ந்திருப்பதால், இன்று அரசியலையும், நாம் தனிக் கோலாகக் கொள்ள வேண்டி யிருக்கிறது. எனினும், மகாத்மா (அவர் என்றென்றும் வாழ்க) இந்திய அரசியலையே தெய்விகம் கமழும் ஒரு புனித வஸ்து வாக்கிவிட்டார். ஆகவே, இனி "தெய்வத்தை மறந்த அரசியல்" என்று இந்தியாவில் சொல்ல இடமில்லை. இப்பொழுது தேசத் தொண்டர்கள் காந்தி தொண்டர்களாகி விட்டார்கள். கடந்த நாலைந்து வருடங்களாக இந்திய அரசியலைப் பின்பற்றிக் கவனித்து வருவோருக்கு இவ்வுண்மையும், அதன் காரணமும் புலப்படும். இவ்வொரு சில உரைகளுடன் தொண்டர்களுடைய குண நலத்தையும், தன்மையையும் பற்றி வெளிப்படையாகச் சற்று கவனிப்போம்.

இன்றையத் தொண்டர்களைக் கவனிப்பதற்கு முன்னர், இந்தியர் அனைவருக்கும் நன்கு பரிச்சயப் பட்ட சமயத் தொண்டர்களையும் அவ்வப் பொழுது கவனித்து வந்தால் நல்ல பயன் தரும். சமயத் தொண்டர் முன்னர் எவ்வாறு இருந்தனர்; இன்று எவ்வாறு இருக்கின்றனர், என்று நமது சகோதரர்களுக்கு எடுத்துரைக்க வேண்டுவதில்லை. இவர்கள் யார்? இவரது படைகளை வகுத்து, நாட்டில் பரவ விட்டதற்குக் காரண புருஷராகி நின்றோர் யாவர்? இந்திய ரனைவரும் போற்றும் கடவுளர்களே அவர்கள். சங்கரர், ராமானுஜர், மாத்வர், திருஞான சம்பந்தர், நம்மாழ்வார், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சைதன்யர், புத்தர், மகாவீரர் முதலிய பிர பிருதிக ளாவர். இவர்களின் பெயரால் தோன்றிய சமயங்கள் பல் வேறாகவும் அவ்வவற்றின் கொள்கைகள் பலதிறப் பட்டவைகளாகவும் இருந்த போதிலும் இவர்கள் அனைவரும் தொண்டர்களின் இலக்கணங்களை நிர்ணயிப்பதில் மிகவும் அழகாக ஒன்றுபட்டு நிற்கிறார்கள். இவர்கள் மட்டுமேயன்று; எவரானாலும் ஒருகொள்கையைப் பரவ விடுதற்குத்

* இது ஒரு தலையான அபிப்பிராயம், இத்தகைய அபிப்பிராய முடைய இந்தியர்களின் தொகை மிகச் சொற்பமே.—பத்திராதிபர்.

தொண்டர்களைக் கூட்டுங்கால், அவர்களுக்கு முற்கூறியவர்கள் வகுத்த இலக்கணங்களுக்குப் புறம்பான எதையும் நிர்ணயிக்க முடியாது. தொண்டர்கள், மேற்குறித்த இலக்கணங்களுடன் திகழ வேண்டு மென்பது இயற்கை விதி என்றே சொல்லவேண்டும். ஏன்? சர்வ ஐசுவரியங்களும் நிறைந்த ஸாகரமாக விளங்கும் பரம் பொருளைக் கவனிப்போம். அவர் தன்னுடைய காரியங்களைக் கவனிப்பதற்கு அமர்த்தியிருக்கும் தொண்டர்களை, அவர்களுடைய ஒழுக்கங்களை, சுறு சுறுப்பை, அவர்கள் பெறும் ஊதியங்களைக் கவனியுங்கள். சூரிய சந்திரர்களை, மேகங்களை, காற்றுக்களைப், புயல்களை, ஆறுகளை, கடல்களை, நிலங்களை, மலைகளை எல்லாவற்றையும் கவனியுங்கள். இவைகள் தம்முடைய வேலைகளைச் சோர்வில்லாமல் எவ்வாறு செய்து வருகின்றன? சூரியனைப் பாருங்கள். ஆஹா, இத்தனை கோடி வருஷங்களில் ஒருநாளைக்கேனும் தன் தொழிலில் தவறியிருக்கின்றானா? என்னே அவனுடைய காம்பீரியம்? சுறு சுறுப்பு? இப்படி யிருந்தும், தான் வேலைசெய்து வருவதுபற்றி நவசக்தியில், சுதேசமித்திரனில், தமிழ்நாட்டில், வேறு எதிலாவது தற்பெருமையாகப் பேசி எழுதியிருக்கிறானா? அல்லது, தான் இவ்வளவு வேலை செய்து வருவதுபற்றி, பரம்பொருளின் சபையில் தனக்குத்தான் உச்சஸ்தானம் வேண்டும் என்று ஒருநாளேனும் வாதாடியதுண்டோ? அந்த நோக்கத்துடனே கட்சிகள் பிரதி கட்சிகள் செய்ததுண்டோ? மானிடனே! இத்தனைகோடி வருஷங்களாக சலிப்பின்றி எம்பெருமான் சூரியன் உதித்தெழுந்து தன் கதிர்களைப் பரப்பியும், உன்னிடத்தும் தோல்வி யுறுமாறு செய்துவிட்டாய்? உன்னுடைய அறியாமையாகிய அகந்தையாகிய பாறையில் எண்ணிறந்த கதிர்கள் கொண்டு கணக்கில்லாத வருடங்களாக மோதிவந்தும், சூரியனுடைய கதிர்கள் கூர் மழுங்கினவே அன்றி, உன்னுடைய அறியாமை அகந்தைகளில் ஒரு சிறிதும் தகரவில்லையே! ஒரு நாளைக்குத் தெருவில் வந்தே மாதரம் என்று கூவுகிறாய். மறுநாள் பாரத தேவியின் சபையில் உனக்கே உயர்ந்த ஸ்தானம் வேண்டும் என்று கட்சி கட்டுகிறாய். இவற்றைவிட்டு இது முதலாவது சரியான கண்கொண்டு சூரியனைப் பார்த்துத் திருந்த மாட்டாயோ? நிற்க

முன்னர் கூறிய மகான்கள் தொண்டர்கள் எத்தன்மைத்தாக இருக்கவேண்டும் என்று குறித்துள்ளார்கள், எத்தகைய ஊதியம் கொடுப்பதாகச் சொல்லியுள்ளார்கள் என்று பார்ப்போம். தொண்டர்களிடத்து அவர்கள் விரும்பிய குணங்கள், தெய்வபக்தி, கல்வியறிவுடைமை, ஒழுக்கநிறைவு, சர்வபரித்தியாகம், எனும் இவைகளாம். எனவே ஊதியமாவது, பிரயாணப்படி முதலிய பல படிகளாவது கேட்பதற்காவது, பெறுவதற்காவது இடமில்லையென்று அறிவிப்புக் கொடுத்து விட்டார்கள். இவற்றை அறிந்தும் தான் அந்தக் காலத்தில் ஏராளமான தொண்டர்கள் நாட்டில் எங்கும் உலவினர். பெரும்பாலும், மேற்கூறிய மகான்கள் கேட்ட இலக்கணங்கள் பொருந்தியவர்களாகவே தான் இருந்தார்கள். அத

றுற்ருன், அந்தக் காலத்தில் நமது ஜாதி அவர்களைத் தாம் வழிபடு கடவுளர்களுக்கு மேலாகப் பாவித்துப் பூஜித்து வந்தார்கள். நாளடைவில் என்னுயிற்று? இப்பெருமான்கள் அவர்வழி வந்தவர்கள் செய்துவந்த அரிய ஊழியத்தை, காட்டிய தன்னல மறுப்பைக் கண்ட நமது ஜாதி, "எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" எனும் உரை யேறப் பெற்ற நமது ஜாதி சிறிதும் நன்றிமறவாமல் இன்று தொண்டர்கள் வேஷத்தில் திரியும்———(என்னென்பதெனத் தெரியவில்லை)—————களையும் தன்னிடை உலவ விடுத்தும் ஆகாராதிகளைக் கொடுத்துக் கொண்டும் வருகிறது. ஆதலால் இன்றைய அடியார்களே சாதுக்களே, சந்நியாசிகளே, இந்த ஜாதியை நீங்கள் ஏமாற்றித் திரிகிறீர்கள் என்று நினைந்து இறுமாந்து போகவேண்டாம். நீங்கள் பிழைக்கிறீர்கள் என்ருல், உங்களுடைய சொந்த யோக்கியதையினுல் இல்லை; மற்று சங்கரன், ராமானுஜன், சம்பந்தன், சைதன்யன் முதலியவர்களுடைய பெயர்களின் மகிமையினுல் என்று உணருங்கள். அவர்கள் நாமத்திற்கு அத்துணைபெருமை இந்த ஜாதியில் வந்ததேன் என்று ஆராய்ந்தறிந்தீர்களா? அவர்களுக்கிருந்த சுறுசுறுப்பில், தன்னல மறுப்பில் கல்வியறிவு தேர்ச்சிகளில் ஆத்ம ஞானத்தில், கஷ்டங்களை முகமலர்ச்சியுடனே ஏற்றுக்கொள்ளும் தன்மையில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட நீங்கள் பெற்றுளீர்களா? இவற்றைப் பெருத நீங்கள் இன்று வீழ்ந்துவிட்டீர்கள் என்ருல் அதில் ஏதேனும் ஆச்சரிய முண்டோ? தேசத் தொண்டர்களே, நீங்களும் மேலே சொல்லிய விதிகளைக் கடந்து நெடுநாள் வாழ முடியாதென்பதை அறியுங்கள். இந்த இரண்டு மூன்று வருடங்களுக்குள் பலர் இவ்வுண்மையை நன்கு உணர்ந்துவிட் டிருக்கிருர்கள் என்பது வெளிப்படை.

ஒத்துழையாமையின் துவக்கத்தில் தோன்றிய குழாங்களை இன்றைக்கு ஏன் காணவில்லை? சிறைக்கென மார்புதட்டி வெளி வந்தவர்கள், கிராமாந்திரங்களில் வேலைசெய்யும் காலமாகிய இன்றைக்கு மறைந்துவிட்ட தன் காரணமென்ன? அன்றைக்கும் இன்றைக்கும் நம் தமிழ் மாணவர்களிடை கிளர்ச்சி ஒரு சிறிதும் தோன்ருத காரணமேன்? இவற்றிற்கெல்லாம் உத்தரவாதிகள் யார்? எனும் இவைபோன்றவற்றை ஒவ்வொரு தமிழனும் ஆராயக் கடமைப் பட்டுளான்.

தலைவர்களும் தொண்டர்களும் இதற்குக் காரணராவர். ஆங்கிலக் கல்வியும் காரணம். தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் இணைபிரியாத அன்பு ஏற்படவில்லை. அவர்களுக்கிடை ஒரே குடும்பம் என்ற ஐகமத்திய உணர்ச்சி ஏற்படவில்லை. ஒருவேளை ஏற்பட்டிராது. தலைவர்கள் ஆங்கிலங் கல்லாத, தமிழ்வாசனை நிரம்பிய உண்மைத் தமிழராய் இருந்திருந்தால் அவ்வுணர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். ஆனுல் அதுகூடச் சொல்வதற்கில்லை. ஏன், ஆங்கிலங் கல்லாதவரும்

கற்றோரையே பின்பற்றுவதால் என்க. அதுதான் காரணம். மாணவர்கள் வெளிவராமைக்கும் இன்னொன்று, சம்பளம் பெறும் ஒரு கூலியின் அளவு, ஒரு தொண்டர்வேலை செய்யவில்லை என்பதனால் தொண்டரைவிலக்கி, ஒரு கூலியாளை நியமிக்கும் மனப்பான்மை தலைவர்களை விட்டொழிய வேண்டும். தொண்டர்களும் தம் பொருட்டு ஆகும் செலவிற்கு, அரைவாசி வேலையாவது தாம் செய்கிறோம் என்று பார்த்துக்கொள்ள வேண்டும். இன்னும் தொண்டர்களுக்கும் ஒருவார்த்தை சொல்லவேண்டும். அவர்களிடை விரும்பத்தகாத குணங்கள் பல விருப்பதும், விரும்பத்தக்க குணங்கள் இல்லாமல் இருப்பதும் மிகவும் வருந்தத் தக்கதாகும். இன்று, கிராமங்களில் வேலை செய்வதற்குப் பிரியம் அவர்களுக்கு இருப்பதில்லை. சிறைக்குச் செல்வதற்கேன் அலைகிறார்கள், பின்னர் விழும் பூமாலைகளைக்கருதி நேயர்களே, வீணாக ஏமாந்து போகாதீர்கள். வெறுமே சிறைக்குச் சென்று விடுவதால் சிறப்படைய மாட்டார்கள். உண்மைத் தொண்டே பாரத தேவியின் அருளைக் கூட்டுவிக்கும். தலைவர்களாகட்டும், தொண்டர்களாகட்டும் இருவரும் உண்மைத் தொண்டு இயற்ற வேண்டுமானால், பகவத்கீதையைப் படித்து அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயற்சிசெய்து, அதிற்கூறிய யோக நிலையிலிருந்து தொண்டு செய்யவேண்டும். அவ்வாறு செய்வோர் ஒரு சிலர் இருந்தாலும் போதும். நாடியபொருள் கைகூடிவிடும். சகோதரர்களே அர்ஜ்ஜுனனை முன்நிறுத்திக் கொள்ளுங்கள்! கண்ணன் உபதேச மொழியையும் அர்ஜ்ஜுனன் காண்டீபத்தையும் கைப்பற்றி ஒழுகுங்கள். இதுவே உங்கள் லட்சியமாக வேண்டுமேயல்லாது, சிறிய பதவிகளும் சௌக்கியங்களும் அல்ல. எல்லோரும் யோகிகள் ஆகவேண்டும். இதுதான் பாரத தேவி வேண்டுகிறாள்.

நியாயத்திற்காக சண்டை செய்பவர்கள் பிறரிடம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் :—ஸ்ரீ காந்தி.

* * * * *

நாம் எதை வேண்டுமாயினும் இழந்து விடலாம். ஆனால் நாம் நமது கௌரவத்தை இழக்க நாம் இடந்தருதல் கூடாது :—

* * * * *

நமது மனசாட்சிக்கு விரோதமாக நாம் நடந்து கொள்வோமானால் நம்மை சிருஷ்டித்தவருக்கு விரோதமாகப் போகநேரிடும் :—

* * * * *

குற்றமற்றவரை, ஒன்றும் அறியாதவரை நிராகரித்து, கண்டிப்பது எவ்வளவு வெட்க கேடான காரியம் :—ஸக்கராத்.

* * * * *

அநீதியாக சிறையிலடைக்கும் அரசாங்கத்தின் கீழ் நியாயமாக இருக்கும் மனிதனுக்கு தகுந்த இடம் சிறையே :—தோரீ,

கடவுள் எங்கும் இருக்கிறார்

"எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ யன்றோ பராபரமே.
"என்னதியா னென்ன லற்றோர்க் கெங்கிருந்து பாக்கினுநின்
சந்நிதியாம் நீ பெரிய சாமி பராபரமே."

'சிவமயம்' என்னும் வார்த்தையை நமது நூல்களின் தலைப்பி லெல்லாம் காணலாம். நம்மவர்கள் எழுதும் கடிதங்களின் தலைப்பிலும் சிவமயமே திகழ்கின்றது. ஆயினும் 'சிவமயம்' என்று தாங்கள் எழுதும் சொற்றொடரின் பொருளை அறியாதார் பலர். அதன்பொருளை நாம் ஒவ்வொருவரும் உள்ளபடி அறிந்திருந்தால் இந்த உலகம் மிகவும் மேன்மையா யிருக்கும். எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம், எங்கும் கடவுள் மயம், எல்லாம் கடவுள் மயம்; அதுவன்றி வேறு ஒன்றுமே யில்லை. நான், நீ, அவன், அவள், அது மிருகங்கள், பறவைகள், ஊர்வன, மரங்கள், செடிகள், ஆறுகள், சோலைகள், மலைகள், கடல்கள், நக்ஷத்திரங்கள், சூரியர்கள், சந்திரர்கள், வானத்தில் எண்ணிறந்தனவாசத் திகழும் பிரம்மாண்டமான அண்டகோளங்கள் எல்லாம் கடவுள் மயம் என்னும் பெரிய பொருளைச் சிவமயம் என்னும் சிறிய சொற்றொடர் அடக்கிக்கொண் டிருக்கிறது.

'சிவமயம், சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்னும் வாக்கியங் களும்,

"எங்கும் சிவமயம்! எங்கும் சிவசத்தி."

என்பனவாதிய பாடல்களும் எல்லாம் சிவமயம், எல்லாம் கடவுள் மயம், எங்கும் கடவுள் மயம் என்னும் பெரிய உண்மையை விளக்க எழுந்தவையே.

"கண்ணில் காண்பதுன் காட்சி கையாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ணலே நின் அருள்வடி வாகுமே."

இந்த அற்புதப் பாடலின் பொருள் மிகவும் அற்புதமானது. கண்ணில் காண்பதெல்லாம் நின்காட்சி, கையால் செய்யப்படும் எந்தத் தொழிலும் உனக்காக யாம் செய்யும் பூசையாம், வாயினால் பேசுவதெல்லாம் உன்னைப் போற்றிப் புகழும் மந்திரம் (மண்ணொ டைந்தும்) மண், நீர், தீ, காற்று, ஆகாயம் முதலிய ஐந்து பூதங்களும், உலகமெங்கும் திகழ்கின்ற உயிர்த்திரள்கள் யாவும், எம்பெருமானே!

நின் அருள்வடிவமாகும் என்று தாயுமானவர் கூறுகின்ருர். வேதத்தின் அரிய பொருளை யெல்லாம் இந்தத் தமிழகத்து ஞானி ஒரே பாட்டில் அமைத்துவிட்டார்.

நான், நீ, அவன், அவள், அது மட்டுமன்று எல்லாம் சிவமயம், எல்லாம் கடவுள் மயம் என்று அறிதலே மெஞ்ஞானமாகும். அதனை அறிதலே தெளிவாகும். அதுவே முத்தி, தெளிந்தவர்கள் காண்பதெல்லாம் சிவமயமே. அப்பொழுது எல்லாம் நான் அல்லது எல்லாம் அவன் என்னும் ஒரே உண்மை மட்டுமே தெரியும். வேற்றுமை காணமுடியாது. அர்ச்சுனன் கண்ட விச்வரூபக் காட்சி இதுவே. அவன் அனைத்தையும் ஸ்ரீகிருஷ்ணமயமாகக் கண்டான். இந்த உண்மையை அறிந்த பொழுதுதான் நாம்

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேருென் றறியேன் பராபரமே."

என்று தாயுமானவருடன் பாடலாம், அப்பொழுது தான் நமக்கு இந்த உலகம் இன்பமயமாகத் தோன்றும். இதனை ஒருவாறு விளக்குமாறு, முற்காலத்தில் நடந்த கதை யொன்றை இங்கே கூறுகின்றேன்.

முன் மகம்மதியர்கள் நமது தேசத்தை ஆண்டகாலத்தில் மகம்மதிச் சக்கரவர்த்தியிடம் ஒரு சிறிய நாட்டின் மந்திரி ஒருவர் சென்ருர். மேற்படி மந்திரி பெரிய வைதிகர், மதவைராக்கிய மிகுந்தவர். அதனுல் மகம்மதியச் சக்ரவர்த்தி அவரை கௌரவத்துடன் உபசரித்தார் ஆயினும் அம்மந்திரியின் பாண்டித்தியத்தைப் பரீட்சிக்கவேண்டும் என்னும் ஆவல் அவருக்கு உண்டாயிற்று. மகம்மதியச் சக்ரவர்த்தி விசேஷக் கல்விப் பயிற்சி யுடையவர் அல்லர். ஆனுல் மேற்படி மந்திரி உத்யோகம் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்பிய ஒருவனுல் மூன்று கேள்விகள் சக்ரவர்த்திக்குக் கூறப்பட்டன. மந்திரி சக்ரவர்த்தியிடம் வந்தவுடன் அவரிடம் பின்வரும் கேள்விகளைச் சக்ரவர்த்தியார் கேட்டார்.

"கடவுள் எந்தத் திசையை நோக்கி யிருக்கிருர்? கடவுள் எங்கே உட்கார்ந்திருக்கிருர்? அவர் என்ன செய்கிருர்?"

இந்தக் கேள்விகளுக்கு எட்டு நாளையில் சரியான "ஜவாப்" சொல்லிவிட்டால் மேற்படி மந்திரிக்குப் பெரிய உத்தியோகம் கொடுக்கப்படும் என்றும் இன்றேல் அவர் சிரம் சேதிக்கப்படும் என்றும் சக்ரவர்த்தி தெரிவித்தார். இந்தக் கேள்விகள் மிகுந்த கடினமானவை யென்று மந்திரி மனதிற்பட்டது. ஆயினும் அவர் சக்ரவர்த்தியைப் புகழ்ந்து பேசிவிட்டு இந்தக் கேள்விகளுக்குத் தக்க ஜவாப் சொல்வதற்கு எட்டுநாள் வாயிதா வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்,

பின் மந்திரி தம் வீட்டுக்குச் சென்று மேற்படி கேள்விகளுக்குத் தக்க விடை சொல்லுமாறு சிந்தித்த வண்ணமா யிருந்தார். ஆனால் எவ்வளவு யோசித்தும் அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. கடைசியாக எட்டாவது நாளும் விடிந்துவிட்டது. கேள்விகளுக்குத் தக்க "ஜவாப்" ஒன்றும் தோன்றவில்லை. பின் மேற்படி மந்திரி காலதாமதஞ் செய்யக்கருதிச் சுகவீனமாயிருப்பது போலப் பாசாங்கு செய்தார். இதனைக் கண்ட அவர் வேலைக்காரன் அவரிடம் சென்று விசாரித்தான். உடனே அவர் "நீ என் கிட்ட வராதே, என்னைத் தொந்தரவு செய்யாதே, இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் சாகப் போகிறேன் என்றார்." வேலைக்காரன் என்ன விஷயம் என்பதைத் தயவுசெய்து என்னிடம் சொல்லுங்கள். நீங்கள் கஷ்டப்படுவதை காண்பதினும் நான் என் உயிரைவிடச் சித்தமாயிருக்கிறேன் என்றான். இதனைக் கேட்ட மந்திரி விஷயத்தைத் தெரிவித்தார். அந்த வேலைக்காரன் மிகத் தாழ்ந்த நிலைமையில் உள்ளவன். அவனை மிகக் கேவலமாக எல்லாரும் நினைத்துக்கொண் டிருந்தனர். ஆனால் உண்மையில் அவன் மந்திரியின் சீடன், கல்வி யறிவு உள்ளவன். அவன் அந்தக் கேள்விகளுக்குத் தக்க விடைகளை அறிவான். அதனால் அவன் மந்திரியை நோக்கி "நான் சக்ரவர்த்தியிடம் சென்று அவர் உம்மிடம் கேட்ட கேள்விகளுக்கு விடையளித்து வருகிறேன். உமக்குப் பதிலாக நான் சக்ரவர்த்தியிடம் போகிறேன் என்பதையும் அவருக்குத் திருப்திகரமான விடையளியாவிட்டால் உமக்குப் பதிலாக நானே உயிரிழக்கச் சித்தமாயிருக்கிறேன் என்பதையும் எழுதி ஒரு கடிதம் தாரும் என்றான். இவ்வாறு செய்ய மந்திரி துணியவில்லை. ஆனால் இந்தச் சமயத்தில் ராஜாவின் தூதன் ஒருவன் வந்துவிட்டான் அவனைக் கண்டவுடன் மந்திரி பயந்து நடுநடுங்கினார். அதனால் அவர் தமது வேலைக்காரனுக்கு உத்தரவு கொடுத்து விட்டார். வேலைக்காரன் தன்னிடமிருந்த கந்தைத்துணிகளை உடுத்திக்கொண்டு சக்ரவர்த்தி சமூகத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

வேலைக்காரன் ஒரு பெரிய வேதாந்தி. அதனால் வேலைக்காரனை இந்த வித்வான் அச்சமின்றித் தைரியமாகச் சக்ரவர்த்தி முன் சென்று "ஐயா, தமக்கு வேண்டுவது யாது? தாம் கேட்க விரும்புவது" என்ன என்றான். உடனே சக்ரவர்த்தி உனது எஜமானிடம் நான் கேட்ட கேள்விகளுக்கு நீர் தக்க விடையளிக்க முடியுமா? என்றார். நான் தக்க விடையளிப்பேன் என்றார் புலவர். ஆனால் நீர் உமது கேள்விகளுக்குத் தக்க விடையளிப்பவர் ஒரு குரு என்பதையும் கேள்வி கேட்கும் நீர் சீடர் என்பதையும் அறிவீர். நீர் நல்ல மகம்மதியர். உமது மதநூல்களி லுள்ளபடி சரியாக நடந்து கொள்பவர். உமது சாஸ்திர நீதிகளின்படி குருவின் ஸ்தானத்திலுள்ள நான் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கவேண்டும். நீர் நம்மைவிடத் தாழ்ந்த ஸ்தானத்தில் இருக்கவேண்டும் என்றார். இதனைக் கேட்ட சக்ரவர்த்தி அந்தப் புலவருக்கு உயர்ந்த ஆடைகளைக் கொடுத்துத் தமது சிம்மாசனத்தில் அவரை அமர்த்தித் தாம் அந்தப் புலவருக்

கருகே தரையில் உட்கார்ந்து கொண்டார். புலவர் சக்கரவர்த்தியின் சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் சக்கரவர்த்தி புலவரை நோக்கி "ஒரு விஷயம் ஞாபகம் இருக்கட்டும். எனது கேள்விகளுக்குத் தாம் சொல்லும் விடைகள் எனக்குத் திருப்தியில்லாவிட்டால், நான் உம்மைக் கொன்றுவிடுவேன்" என்றார். அது எனக்குத் தெரியும் என்று கூறினார் புலவர்.

முதலாவது கேள்வி வந்தது. கடவுள் எங்கே உட்கார்ந்திருக்கிறார்? இந்தக் கேள்விக்குச் சுருக்கமான விடைகொடுத்தால் அந்த மகம்மதியச் சக்ரவர்த்திக்கு விளங்காது. அதனால் அப்புலவர் ஒரு பசுவைக் கொண்டு வரும்படி உத்தரவு செய்தார். உடனே ஓர் அழகிய பசுவந்து நின்றது. இந்தப் பசுவினிடம் பால் இருக்கிறதா? என்றார் புலவர். ஆம் என்றார் சக்கரவர்த்தி. "பால் எங்கே யிருக்கிறது"? பசுவின் மடியில் இருக்கிறது என்றார் சக்ரவர்த்தி, "அது தவறு. பசுவின் சரீரம் எங்கும் பால் பரவியிருக்கிறது என்றார் புலவர். கொஞ்சம் பால் கொண்டு வரப்பட்டது. உடனே புலவர் வெண்ணெய் எங்கே யிருக்கிறது. இந்தப் பாலில் வெண்ணெய் இருக்கிறதா என்றார். உடனே சக்ரவர்த்தி முதலியோர் இதில் வெண்ணெய் இருக்கிறது என்றார்கள். ஆனால் அது "எங்கே யிருக்கிறது. எனக்குக் காட்டுங்கள்" என்றார் புலவர். அவர்களால் காட்ட முடியவில்லை. உடனே புலவர் "நீங்கள் பாலில் வெண்ணெய் எங்கே யிருக்கிற தென்பதைக் காட்ட முடியாவிட்டாலும் பாலில் வெண்ணெய் இருக்கிறதென்பதை நம்புகிறீர்கள். உண்மையில் வெண்ணெய் பாலில் எங்கும் இருக்கிறது. அது போலவே கடவுளும் எங்கும் இருக்கிறார். உலக மெல்லாம் எங்கும் கடவுள் இருக்கிறார். பாலில் எங்கும் வெண்ணெய் இருப்பது போலவும், பசுவில் அதன் சரீரமெங்கும் பால் இருப்பது போலவும்; கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார். அவர் இல்லாத இடமில்லை.

பாலைப் பெறுவதற்காகப் பசுவின் மடியில் பால் கறக்க வேண்டியதாக இருக்கிறது. அது போலவே நீர் கடவுளை அடையவேண்டுமானால், உமது சொந்த இருதயமான மடியைக் கறக்கவேண்டும். இப்பொழுது உமது கேள்விக்குத் தக்க விடை கிடைத்து விட்டதா? அரசே" என்றார் புலவர். "ஆம் சரி, சரி" யென்றார் சக்ரவர்த்தி, அதனைக் கேட்டவுடன் கடவுள் எங்கோ ஏழெட்டு உலகங்களுக்கப்பால் ஒரு தெய்வீக உலகத்தில் இருக்கிறார் என்று சக்ரவர்த்தியிடம் சொல்லி ஏமாற்றி வந்த போலிப் புலவர்களெல்லாம் வெட்கித் தலை குனிந்தனர். அரசனுக்கு அவர்களிடமிருந்த மதிப்பு அன்று முதல் போய்விட்டது.

பின் இரண்டாவது கேள்வி வந்தது: எந்தத்திசையை நோக்கிக் கடவுள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் வடக்கா? தெற்கா? கிழக்கா? மேற்கா?" இது ஒரு விநோதமான கேள்வி. ஆனால் அந்தச் சக்ரவர்த்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் கடவுளை நம்மைப்போன்ற

ஒரு மனித ரென்று கருதியிருந்தனர். உடனே புலவர் "ஒரு விளக்குக் கொண்டு வாருங்கள்.'' என்றார் ஒரு மெழுகு வத்தி விளக்கு கொண்டுவரப்பட்டது. "இந்த விளக்கு எந்தத் திசையையும் நோக்கி யிருக்கவில்லை. அது எல்லாத் திசைகளையும் சமமாக நோக்கி யிருக்கிறது. அது போலவே கடவுள் நமது ஹிருதயமாகிற விளக்கில் எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக இருக்கிறார். அவ் விளக்கு எங்கும் நோக்கியதாக இருக்கிறது'' என்றார் புலவர். இதனைக் கேட்ட சக்ரவர்த்தியும் மற்றவர்களும் சமாதானம் அடைந்தனர்.

கடைசியாக மூன்றாவது கேள்வி, கடவுள் என்ன செய்கிறார்? என்பதே. உடனே புலவர் சக்ரவர்த்தியை நோக்கி நீர் போய் மந்திரியை இங்கே அழைத்து வாரும்.'' என்றார். உடனே தமது வேலைக்காரச்சீடன் ராஜசபையில் எவ்வாறு விடை கூறுகிறானோ என்று வீட்டில் கவலையடைந்து கொண்டிருந்த மந்திரி வந்தார். தமது வேலைக்காரன் சக்ரவர்த்தியின் சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருப்பதைக்கண்டு அவர் அதிசய மடைந்தார். உடனே அவரைப் புலவர்க்குரிய ஆசனத்தில் வீற்றிருக்கு மாறு (அவர் வேலைக்காரனாயிருந்த) புலவர் கூறினார். மந்திரி அவ்வாறே வித்வான் ஸ்தானத்தில் வீற்றிருந்தார் பின் சக்ரவர்த்தியை மந்திரியின் ஸ்தானத்தில் வீற்றிருக்குமாறு உத்தரவு செய்தார் புலவர். உடனே புலவர் சக்ரவர்த்தியை நோக்கிப் "பார்த்தீரா? இது தான் கடவுளின் வேலை. அவர் அடிக்கடி இந்த உலகத்தில் ஒவ்வொன்றையும் மாற்றிக் கொண்டிருக்கிறார். இவ்வாறாகப்புலவரை ராஜாவாகவும், ராஜாவை மந்திரியாகவும், மந்திரியைப் புலவராகவும், மாற்றியது அவர் வேலையே. இவ்வாறு தான் அவர் இந்த உலகத்தில் எப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார். ஒருவரை உயர்த்தல், மற்றொருவரைத் தாழ்த்தல், ஒன்றை மறைத்தல், மற்றொன்றைப் புதிதாக இயற்றல், இது போன்ற எண்ணிறந்த காரியங்களைக் கணந்தோறும் தினந்தோறும் எப்பொழுதும் செய்து வருகின்றார். இவ்வாறு மாறுதல்கள் உலகத்தில் நடந்துகொண்டே யிருக்கின்றன. எல்லாம் அவன் செயல். அவனன்றி ஓ ரணுவும் அசையாது. அவன் எங்கும் இருக்கிறான். எல்லாம் செய்கிறான் என்றார். இது கேட்ட சக்ரவர்த்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தார்கள். அன்று முதல் மந்திரியின் வேலைக்காரனாயிருந்த அந்தப் புலவர் ஒரு மந்திரியானார்.

விறகிற் றீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே—அப்பர்

ஸ்ரீ கம்ப ராமாயணம்

அயோத்தியா காண்ட உரை

(ஸ்ரீமாந் வ. வீரவாகு பிள்ளை யவர்கள் எழுதியது.)

முதலாவது மந்திரப்படலம்.

வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ
தத்தின் வைப் பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போ
லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயும்
கொடுமை யிழைப்பக் குடைதுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோர்
இடுக்கண் காத்த கழல்வேந்தை. (1)

(உரை)—மந்தரையும் சிறிய கோப் பெருந்தேவியும் கொடுமை செய்ய அரசுரிமையை நீக்கிக் காட்டையும் கடலையுங் கடந்து தேவர்களது துன்பத்தைத் துடைத்த வீரகண்டையணிந்த ஸ்ரீராமனை பிரகிருதி மாயையிலிருந்து தோன்றி (மக்கள் அறிவின்) எல்லையைக் கடந்த பெரிய பூதத்தின் காரியமாகிய உலகமெங்கும் உடலும், அதன்கணுள்ள உயிரும், அதன் உணர்வும்போல உள்ளிலும் வெளியிலும் இருந்தனனென்று பெரியோர் கூறுவர்.

கூன்—மந்தரை; மந்தரையை முன்னர்க் கூறினார் அவளே கோத்தாயின் மனந்திரித்தாளாகலின். 'குடை' அரசுரிமையைக் குறித்தது. வான்—பிரகிருதிமாயை, பூதம், மண், நீர், தீ, காற்று, வானம் என ஐந்து. இது கடவுள் வாழ்த்து.

வேறு.

மண்ணுறு முரசினம் மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பருமை யானையான்
கண்ணுறு கவரியங் கற்றை சுற்றுற
எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினன். (2)

(அழகாகப்) பண்ணுதல் அமைந்த தவிசை உடைய மிக்க கோபமுள்ள யானைகளை உடைய தசரத மன்னர் மார்ச்சனை பொருந்திய முரசின் கூட்டங்கள் மேகத்தைப்போல ஒலிக்கவும், பெருமை மிக்க கவரியினது அழகிய கற்றை சுற்றவும் (ராஜாங்க விஷயங்களை) எண்ணுதற் கமைந்த மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தார்.

பண்ணுறு பருமம் என்றும் படர்சினயானை யென்றும் பிரித்துக் கூட்டிக் கொள்வது. பருமம்—யானைக்கழுத்திலிடும் தவிசு.

மண்—மார்ச்சனை; அது முரசின் வாயிலே இறுகக் கட்டிய தோலின் நடுவிலே தடவும் பசையுள்ள ஒருவகை மண். நச்சினார்க்கினியரும் "மண்ணமைமுழவு" என்பதற்கு இங்ஙனமே பொருள் கூறினர்.

புக்கபின் னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் பெயர்கெனப் பரிவி னீக்கினன்
ஒக்கநின் றுலகளித் தியோக மெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னாயினன். (3)

புகுந்த பின்னால் அரசரையும், ஒப்பில்லாத சுற்றத்தவரையும், சிநேகிதரையும் அகலுக என்று அன்பான சொற்களால் நீக்கி யாரிடத்தும் சமமாக நின்று உலகத்தைக் காத்து அறிதுயில் அமர்ந்த திருமாலைப் போல, தனித்தவரானார்.

பக்கம்—சிநேகிதர். நீக்கினன்—எச்சமுற்று. சக்கரத்தவன்—சக்கரத்தையுடையவன், திருமால். திருமாலுடைய சக்கரத்துக்குச் 'சுதரிசனம்' என்று பெயர்.

சந்திரற் குவமைசெய் தரள வெண்குடை
அந்தரத் தளவுநின் றளிக்கு மாணையான்
இந்திரற் கிமையவர் குருவை யேய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென் றேவினன். (4)

சந்திரனுக்கு உவமை செய்யும் முத்துக்களையுடைய வெள்ளிய குடை வானுலகளவும் தன் குளிர்ந்த நிழலைச்செய்து நிற்க, காவல் செய்யும் ஆக்ஞா சக்கிரத்தை உடையவர் இந்திரனுக்குப் பிருகஸ்பதி பகவானை ஒத்த தன் மந்திரிகளை வருக என்று கட்டளை யிட்டார்.

குடை சந்திரனிலும் வெண்மையாயிருத்தலின் 'சந்திரற் குவமைசெய்தரள வெண்குடை' என்றார். தசரதமன்னர் சம்பராசுரனைப் போர் தொலைத்து இந்திரனுக்கு அரசு ஈந்தாராகலின் 'அந்தரத்தளவு நின்றளிக்கு மாணையான்' என்றனர். இமையவர்குரு—தேவகுரு; பிருகஸ்பதிபகவான்.

பூவரு பொலன்கழற் பொருவின் மன்னவன்
காவலி லாணைசெய் கடவு ளாமெனத்
தேவரு முனிவருந் தேடுந் தேவர்கள்
மூவரி னல்வரா முனிவந் தெய்தினன். (5)

அழகுவந்த பொன்னாற் செய்த வீரகண்டையையுடைய ஒப்பில்லாத வேந்தரது காவலிலே கட்டளையிடுகின்ற கடவுள் என்ன, தேவர்களும் முனிவர்களும் தேடுந் தேவர்களாகிய மூவரிலே (ஒருவராகவைத்து) நால்வராகக்கருதும் வசிட்ட முனிவர் வந்தார்.

பொலன்—பொன். தன்குல குரு வாகிய வசிட்ட முனிவர் சம்மதமின்றி அரசர் கட்டளையிடாமையின் 'ஆணை செய் கடவு

ளென்றார். மூவராவார் பிரகிருதி மாயையிலுள்ள பிரம விஷ்ணு ருத்திரர்கள்.

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினார்
நலமுத னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினார். (6)

குலத்தினது மேன்மையான பழமையையும், சாஸ்திர ஆராய்ச்சியின் மிகுதியையும், பலவாகிய சிறந்த கேள்வியையும், (அக்கல்வி கேள்விகளால் ஏற்பட்ட) பயனையும் பெற்றவர்கள் தமக்கு வரும் நன்மைகள் அடியோடுங் கெடுவதானாலும் நடு நிலையிலேயே கண்ணுயிருப்பவர்கள். கோபத்தை வேரோடுங் கெடுத்து அருமையான தர்மத்தை மேற் கொண்டவர்கள்.

'குல விச்சை கல்லாமற் பாகப்படு மாகலின் குல முதற் றொன்மையும் என அதனை முதற் கணுரைத்தார். கலை—அர்த்த சாஸ்திரங்கள் ; இங்கே ஆராய்ச்சியைக் குறித்தது. குப்பை—மிகுதி.

வேறு.

உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார். (7)

நேர்ந்த பொருளைக் கொண்டு இனி நேரப்போகும் பொருள்களை அறியும் வல்லமையுடையவர்கள். அது ஊழ்வினையால் வந்ததாயினும் மாற்றி விடும் தன்மை யுடையவர்கள். குடிப் பிறப்புக்குத் தக்க மேன்மை உள்ள பெரியவர்கள் அருமையான அறிவு நூலும் படித்தவர்கள் மானத்தை நோக்கு மிடத்துக் கவரிமாவை யொத்த குணமுடையவர்கள் அரிய நூல் என்றது ஆன்ம ஞானத்தைத் தரும் அறிவு நூலை. மானம் என்பது ஒரு குணம் ; அது எக்காலத்தும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்த பொழுது உயிர் வாழாமையுமாகும். தன்னுடைய மயிர்த்திரளில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரிமாவைப் போல மானம் சிறிது கெடவரினும் உயிர் வாழார் ஆகலின் 'மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்' என்றார். 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர் நீப்பர் மானம் வரின்' என்பது குறள்.

காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுணித்தறங் குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்துகொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கு நீரார். (8)

வினை செய்தற்குத் தகுந்த காலமும் இடமும் சாதனங்களும் என்னும் இவைகளை விளங்கப்படித்த அர்த்த சாஸ்திர நூலோடு பொருந்த ஆராய்ந்து தெய்வாநுகூலத்தையும் நுட்பமாகத் தெரிந்து ராஜதர்மத்தையே மேலாக மதித்த பெரியவர்கள் நல்லொழுக்கத்தையும், புகழ்பெருகுதற்கு வேண்டும் செய்கையையும் தெரிந்து கொண்டு தன்பால்வரும் உறுதிப் பொருள்களை யெல்லாம் தம் அரசனுக்குக் கொடுக்கும் குணமுடையவர்கள்.

காலம்—வினை தொடங்குதற்கு ஏற்ற காலம். இடம்—வெல்லுதற் கேற்ற இடம். கருவி—சேனையும் பொருளுமாகிய சாதனங்கள். அறம்—ராஜ தர்மம். குணித்தல்—மதித்தல். பயத்தல்—கொடுத்தல்.

(தொடரும்)

மண்ணைத் தின்னும் மாந்தர்!

சூடானிலும், ஆபிரிக்காவின் சில பாகங்களிலும், தென் அமெரிக்காவிலும், மேற்கு இந்தியத் தீவுகளிலும் குழந்தைகள் மட்டுமன்றி பெரியவர்களும் கூட மண்ணைத் தின்னுகின்றனர். நைல்நதியிலடித்துக் கொண்டுவரப்படும் மண் எளிதில் ஜீரணிக்கக் கூடிய சக்தியுடையதாக விருக்கின்றது. அம்மண்ணை அழகிய சிறு பிஸ்கோத்துகளாகவும், பன் ரொட்டிகளாகவும் செய்து விற்சப்படுகின்றது. மேலும் இதனை க்ஷய ரோக வியாதியால் துன்பப்படுபவர்களே முக்கியமாக உபயோகித்து வருகின்றனர். ஆனால் இதனால் அந்த ரோகம் தடைபடுவதற்குப் பதிலாக மிகுதிப் படுகின்ற தென்பதை இன்னும் அவர்களறிந்து கொண்டதாகத் தெரிய வில்லை. இத்தகைய மண்ணைத் தின்னும் பழக்கம் குழந்தைப் பருவத்திலிருந்தே துவக்கப் படுகின்றது. கீழ் இந்தியத் தீவுகளிலுள்ள வாஸ் என்னுமிடத்தில் மண்ணைத் தின்னும் பழக்கம் மிகுந்து புகையிலை, சாராயம், அபினி முதலியவற்றை உபயோகிப்பவர்களின் வழக்கத்திற்கு ஒப்பான தாகின்றது. இம்மண்ணைத் தின்பவர்களுக்கென இது சேகரிக்கப்பட்டு பதம் செய்யப்படுகின்றது. நதியிலிருந்து இம்மண் சேகரிக்கப்பட்டு சூரிய வெப்பத்தில் உலர்த்தி பொடியாக்கி மீண்டும் தண்ணீர் சேர்த்து விறகுக்கரியைப் போன்று மரக் கிளைகளுடனும் மண்ணுடனும் சேர்த்து எரிக்கப்படுகின்றது. பிறகு இது சாக்கலெட் என்னும் ஒரு வகை மிட்டாயைப் போன்ற வர்ணமுடைய தாகின்றது. இதனைப் பின்பு மார்க்கட்டுகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றது. இவ்வாறு பதப்படுத்தப் பட்டு விற்கப்படும் மண்ணை உண்பதற்குச் சக்தியற்ற ஏழை ஜனங்கள் நதியிலிருந்து இம்மண்ணைச் சேகரித்து அதனை அப்படியே தின்னுகின்றனர். இவ்வாறு மண்ணைத் தின்பதனால் சுகாதாரத்துக்கும் பல கெடுதிகளுண்டாகின்றன. ஆயினும் இத்தகைய துர்வழக்கத்தை விட்டு விடும்படி சுதேசிகளை எவ்வளவு தூண்டிய போதிலும் பயன் படவில்லை.

"Our Secret Foes and Fight for Health."

"நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும்."

ஸ்ரீமான் ஏ. சோக்கலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியது.

(காபி ரைட்)

(486-வது பக்கத் தொடர்ச்சி.)

ஆகையால், அணுக்கிருமிகள் வளர்ந்து பெருகுவதற்கு இடமில்லாதபடி, நாம் நம்முடைய வீடுகளையும், முற்றங்களையும், வீட்டைச்சுற்றியும் சுத்தமாகவும் ஈரமல்லாமலும் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

ஒரு நுண்ணிய கிருமி முற்றும் வளர்ந்துவிடுமாயின், அதன் நடுவிலிருந்து இரண்டாகப் பிரிகின்றது; ஆகவே, ஒரு கிருமி இரண்டாகின்றது. இவ்விரண்டு கிருமிகளும் முற்றும் வளர்ந்தால் இவற்றுள் ஒவ்வொன்றும் நடுவிலிருந்து பிரிந்து நான்கு கிருமிகளாகின்றன. இந்நான்கில் ஒவ்வொன்றும் சீக்கிரமாகவே இரண்டிரண்டு கிருமிகளாகப் பிரிகின்றன. இக்கிருமிகள் ஜீவிப்பதற்கு அநுகூலமான இடமிருக்கிறவரையில் மேற்சொன்னவிதமாகவே பிரிகின்றன. இப்படியே பல கிருமிகள் ஒரு மணி நேரத்தில் முற்றும் வளர்ந்து பிரிந்துகொண்டே போகின்றன.

நம்முடைய உடம்பில் இவ்வியாதிக் கிருமிகள் புகுவது என் பெருங்கேட்டுக் கிடமான தென்பதை நாமே தெரிந்துகொள்ளக்கூடும். நம்முடைய உடம்பில் ஒன்று அல்லது இரண்டே கிருமிகள் மாத்திரமிருக்குமானால் நமக்குக் கேட்டை யுண்டாக்கக் கூடாமலிருக்கலாம்; ஆனால், அவ்வொன்று அல்லது இரண்டு கிருமிகளுமே சில மணி நேரத்தில் முற்றும் வளர்ந்து பிரிந்து ஏராளமாகப் பெருகி விடுகின்றன. இக்கிருமிகள் ஒரு மணி நேரத்திற் கொருதரம் பிரிகிறதென்றால் ஒரு கிருமியிலிருந்து 24 மணி நேரத்தில் எத்தனை கிருமிகள் உண்டாகலா மென்பதை, இதனை வாசிக்கும் நாமே கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

வியாதிக் கிருமிகள் உடம்பினுள்ளே எப்படி புகுகின்றன.

உடம்பின்மேல் எங்கேயாகிலும் விரணங்கள் அல்லது காயசேதங்களி (wounds) ருந்தால் அவ்வழியாகச் சில கிருமிகள் புகுகின்றன. கொசுக்களும், தெள்ளுப் பூச்சி

களும் நம்மைக் கடிக்கும்போது சிலவேளை உடம்பினுள்ளே கிருமிகளை வைத்துவிடுகின்றன. மற்றக் கிருமிகள் மூக்குத் துவாரங்களின் வழியாக மூச்சு வாங்கும்போது உள்ளுக் கிழுக்கப்படுகின்றன; ஆனால், பெரும்பான்மையும் கிருமிகள் அடிக்கடி வாயின் வழியாக உடம்பினுள் செல்லுகின்றன. சிலசமயம் நாம் உண்ணும் உணவின் மூலமாகவும், குடிக்கும் தண்ணீரின் மூலமாகவும் உள்ளுக்கு விழுங்கி விடுகின்றோம். அசுத்தமான கைகளிலிருந்தும், குடிக்கும் பாத்திரங்களிலிருந்தும் அல்லது நம்முடைய வாயிற் படும்படியான எந்தப் பொருள்களிலிருந்தும் அக் கிருமிகள் வாய்க்குள்ளே செல்லலாம்.

சுகாதார முறையில் இரண்டாவது விதி.

சுகாதார முறையின் முதல் விதியால் மற்றவர்களுக்கு நோய் வராதபடி நோயாளியினிடமிருந்து வரும் எல்லாக் கிருமிகளையும் அழித்துவிடல் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றது; ஆனால், ஜனங்கள் நோயாளியினிடமிருந்து வரும் எல்லாக்கிருமிகளையும் அழித்து விடுகிறதில்லை. அதனால் சிலகிருமிகள் பரவி விடுவது உண்மையானதால், அவை நம்முடைய உடம்புகளுக்குள்ளே புகாவண்ணம் தடுக்க முயற்சிசெய்தல் வேண்டும். சுகாதார முறையின் இரண்டாவது விதி என்ன? வியாதிக் கிருமிகள் உடம்பினுள்ளே புகாதபடி காத்துக்கொள்வதேயாம். இந்த விதியை அனுசரித்து நம் உடம்புகளின்மேலுள்ள காயங்களில் கிருமிகள் சேராதபடி நாம் காத்துக்கொள்ளவேண்டும். கொசுக்களும், தெள்ளுப் பூச்சிகளும் நம்மைக் கடிக்காதபடி பார்த்துக்கொள்ளல் வேண்டும். மூக்குத் துவாரங்களையும், வாயையும் தூசு முதலியவை உள்ளே புகாதபடி காத்துக்கொள்ளல் வேண்டும். இவ்விதியின்படி வியாதிக் கிருமிகளை நம்முடைய உடம்புகளுக்குள்ளே சேராதபடி காத்துக்கொண்டால் நாம் தொற்று வியாதிகளால் துன்பப் படமாட்டோம்.

உடம்பினுள்ளே கிருமிகள் சேருகிறபோது என்ன சம்பவிக்கின்றது.

உடம்பினுள்ளே கிருமிகள் சேருகிறபோது அவை அவ்வுடம்பைத் தங்களுக்கு ஆகாரமாக உபயோகித்துக

கொண்டு அதனுள் வளர்கின்றன. அப்போது உடம்பு கிருமிகளைக் கொல்லப் பார்க்கின்றன. உடம்பு வலுவுள்ளதாயிருந்து அதனுள் சிறிதே கிருமிகளிருந்தால் அவ்வுடம்பு அக்கிருமிகளைக் கொன்றுவிடக்கூடும். அதனால் நாம் நோயாளிகளாவதில்லை; ஆனால், உடம்பு பலவீனப்பட்டும் அதற்குள் அநேகங் கிருமிகளு மிருந்தால் அவ்வுடம்பு அவற்றைக் கொல்ல முடியாது. பிறகு உடம்பு அதிக நோயாகிறவரையும் அல்லது சிலவேளை மரணம் வரையும் கிருமிகள் வளர்ந்து பெருகும். கிருமிகள் உடம்பினுள்ளே விஷமுண்டாக்கி அதனை நோய்படச் செய்துவிடுகிறது.

இரத்தத்தால் கிருமிகள் எவ்வாறு கொல்லப்படுகின்றன.

உடம்பானது இரத்தத்தின் மூலமாகவே கிருமிகளைக் கொல்லுகின்றது. சிற்றுருவிளக்கி (Microscope) என்னும் பூதக்கண்ணாடியின் மூலமாய் ஒரு துளி இரத்தத்தைப் பார்த்தால் அதனுள் ஆயிரக்கணக்கான அணுக்கள் தெரிகின்றன. அவைதாம் இரத்த அணுக்கள் (blood corpuscles). அவற்றுள் சில அணுக்கள் வெண்மையாயிருக்கின்றன. இவ் வேள்ளை அணுக்கள் (white corpuscles) வியாதிக் கிருமிகளை விழுங்கி அவற்றை அழித்துவிடுகின்றன. இவ் வெள்ளை அணுக்கள் உடம்பினுள்ளே போர்ச் சேவகர்களைப்போலிருந்து உள்ளே வருங் கிருமிகளைக் கொல்வதே யிவற்றின் வேலையாம். உடம்புக்குக் கிருமிகளோடு சண்டையிடுவது இது முதல் வழியாகும்.

இவ் வெள்ளை அணுக்களைத் தவிர இரத்தத்தில் கிருமிகளைக் கொல்லும் பொருள் ஒன்றிருக்கின்றது. இதற்கு கிருமி கொல்லி (germicidal) என்று பெயராம். இதன் மூலமாகக் கிருமிகளோடு சண்டையிடுவது உடம்புக்கு இரண்டாவது வழியாகும். இக் கிருமி கொல்லி கிருமிகளை விஷப்படுத்திக் கொல்லுகின்றது. உடம்பினுள்ளே கிருமிகள் சேரும்போது இப்பொருள் இரத்தத்தில் கிருமிகளைக் கொல்வதற்கு மிகுதியாகக் காணப்படுகின்றது. பெரியம்மை, தட்டம்மை முதலிய சில நோய்கள் கண்ட பிறகு கிருமிகளைக் கொல்லும் பொருள் அதிகமாகி இரத்தத்தில் அநேக வருஷங்களுக்கு அல்லது இறக்கும்வரை

யும் தங்கியிருக்கலாம். அப்போது அந்நோயின் கிருமிகள் உடம்பினுள்ளே சேருமானால் கிருமிகளைக் கொல்லும் பொருள் அவற்றை உடனே கொன்றுவிடுகின்றது; ஆதலால், அநேக ஜனங்களுக்கு அந்நோய்கள் ஒரு தடவைக்குமேல் வருவதில்லை.

வியாதிக் கிருமிகளை அழிப்பதற்கு நாம் உடம்புக்கு எவ்வித உதவி செய்யக்கூடும்.

வியாதிக் கிருமிகள் உடம்பினுள் பிரவேசியா திருத்தற்கு நாம் மிக்க சாக்கிரதையுள்ளவர்களா யிருத்தல் வேண்டும். நாம் சாக்கிரதையுடனிருந்தபோதிலும் சில கிருமிகள் உடம்பினுள்ளே புகுந்து விடுகின்றன. அது நமக்குத் தெரிவதில்லை. ஆகையால், நம்முடைய உடம்பு சௌக்கியமாயும் நல்ல இரத்தமும் பலமுமுள்ளதாயு மிருந்தால் கிருமிகளை அழித்து விடலாம். ஆனால், உடம்பு நோய்கொண்டும் நல்ல இரத்தமு மில்லாமல் மெலிந்து மிருக்குமானால், நாம் கிருமிகளைக் கொல்ல முடியாது. நாம் நம்முடைய உடம்புகளுக்கு நல்லவுணவும் தேகாப்பியாசமும் (exercise) நித்திரையும் தரல் வேண்டும். நம்முடைய உடம்புகளை எல்லாவகையிலும் சுகமாயிருக்கவும் பலமாயிருக்கவும் நாம் போஷித்தல் வேண்டும். நல்ல இரத்தம் நம்முடைய கிருமிப் பகை வரை எதிர்த்துக் கொண்டு விடுகின்றது. ஆதலால், உடம்பைக் கெடுத்துக் கொள்ளாமல் அதனை நம்மாற் கூடுமான வரையும் பேணுதல் வேண்டும். சுகாதார முறையின் மூன்றாவது விதி என்ன? உடம்பினுள்ளே செல்லும் வியாதிக் கிருமிகளைக் கொல்லுதற்கு எப்போதுஞ் சித்தமாயிருக்கும்படி உடம்பைச் சுகமாகவுந் திடமாகவும் வைத்துக் கொள்வதேயாம்.

அத்தியாயம் 3.

உடம்பின் தோலும் சீழை யுண்டாக்குங் கிருமிகளும்.

தோலின் மூலமாய் உடம்பினுள்ளே புகுகின்ற கிருமிகளைப் பற்றியும் அவற்றாலுண்டாகும் நோய்களைப் பற்றியும் நாம் முதலில் வாசிப்போம்.

(இன்னும் வரும்.)

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

(ஸ்ரீமாந் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

ஏயர்கோன் கலிக்காமருடன் உறவு.

(490-ம் பக்கம் தொடர்ச்சி.)

அப்பாமாலைக்குப் பரிசிலென்று இறைவனும் சிலம்பொலியைக் கேட்பித்தார். தில்லையிற் சிலநாள் தங்கி ஆரூரரைக்காணும் அவாமேலிட திருவாரூருக்கு வந்தனர். வந்ததும் ஆரூரர் எதிர்கொள்ள அவர் தாளிற் சேரமான் பணிய ஆரூரரும் அவரைப் பணிய இருவரும் உடலொன்று உயிரொன்று எனும்படி நட்புற்றனர். அன்று முதல் ஆரூரருக்குச் "சேரமான் தோழர்" எனப் பெயர் வழங்கிற்று. சேரர் பெருமானும் பரவையாரது மாளிகையில் விருந்தினராய் உறைந்தனர். அந்நாளில் நம்பியாரூரர் கேட்டு மகிழ சேரமான் சிவபிரான் மீது "மும்மணிக்கோவை" ஒன்று பாடினர். ஆரூரரும் சேரர் பெருமானும் இங்ஙனம் நட்பினராய் உறையுநாளில், ஆரூரர் மதுரை முதலான பாண்டி நாட்டுத் தலங்களைத் தரிசிக்க விரும்பச், சேரரும் தாமும் உடன் வருவதாகக்கூற, இருவரும் பரிசனங்களுடன் புறப்பட்டுக் கீழ்வேளூர், நாகைக் காரோணம், வேதாரணியம், அகத்தியான் பள்ளி, கோடி, திருப்பத்தூர் என்னுந் தலங்களைத் தரிசித்து மதுரை வந்துசேர்ந்தனர். பாண்டிய ராஜனும் தமது நகரை அலங்கரித்து இருவரையும் வரவேற்றனன். பாண்டியன் மகளை மணந்து மாமனார் இல்லத்துக்கு வந்திருந்த சோழ ராஜனும் அச்சமயத்தில் அங்கிருந்தனன். ஆரூரரும் சேர சோழபாண்டியருடன் ஆலவா யண்ணலைத் தரிசித்துப் பாண்டியன் மாளிகையிலமர்ந்தனர். பின்னர், மூவேந்தருடன் திருப்பூவணத்தைத் தரிசித்தனர். அதன்பின் திருவாப்பனூர், திருவேடகம் என்னுந் தலங்களைத் தரிசித்து மூவேந்தருடன் திருப்பரங்குன்றஞ் சென்று தொழுதனர். பின்பு, திருக்குற்றலம், திருநெல்வேலி, இராமேசுரம் என்னுந் தலங்களைத் தரிசித்து, இராமேசுரத் திருந்தபடியே இலங்கைத் தீவிலுள்ள கேதீ

சுரத்தைத் தொழுது, திருச்சுழியல் சென்று இறைவனை வணங்கினர். அன்றிரவு ஆரூராருடைய கனவிலே சுவாமி தமது கையிற் பொற்செண்டும் திருமுடியில் இண்டைமாலையும் விளங்க காளையான் திருவடிவத்துடன் எங்குமிலாத அற்புத கோலத்தைக் காட்டி "யாமிருப்பது கானப்பேர்" எனக்கூறி மறைந்தனர். ஆரூராரும் "இறைவன் திருவருள் இருந்தவாறு என்னே!" என மகிழ்ந்து கனவின் நிகழ்ச்சியை உடனிருந்த சேரமான் பெருமாளுக்குக் கூறித் திருச்சுழியலி லமர்ந்த ஈசரிடம் விடைபெற்றுக் "காளையார் கோயில்" என வழங்கும் திருக்கானப்பேருக்குச் செல்பவர்

"தொண்ட ரடித்தொழலுஞ் சோதி யிளம்பிறையுஞ்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
புண்ட ரிகப் பரிசா மேனியும் வானவர்கள்
பூச விடக்கடனஞ் சுண்ட கருத்தமருங்
கொண்ட லெனத்திகழுங் கண்டமு மெண்டோளுங்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்று தொலோ வடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே"

எனவரும் (84-ஆவது) அருமைத் திருப்பதிகத்தைப் பாடினர். பின்னர்ச் சிலநாள் அங்கிருந்து புறப்பட்டுத் திருப்புனவாயில், பாதாளீச்சுரம் ஆதிய தலங்களைப் பரவித் திருவாரூர் வந்துசேர்ந்தனர். ஆரூராரையுஞ் சேரமான் பெருமாளையும் ஆரூரிலுள்ளவர்கள் எதிரேற்று உபசரித்தனர். தோழரிருவரும் திருக்கோயிலுக்குச் சென்று புற்றிடங்கொண்ட நாதரை வணங்கிப் பரவையாரது மாளிகைக்கு வந்து சேர்ந்தனர். பரவையாரும் இவர்களை வணங்கி உபசரித்துத் திருவமுது செய்வித்தனர்.

ஸ்தல யாத்திரை :— [சேர நாட்டுக்குப் பயணம்]
(ஐயாற்றுக்குச் செல்ல காவிரி வழிவிடுதல்.)

தமது நாட்டிக்கு வரவேண்டு மென்று நித்தம் வேண்டிவந்த சேரர் பெருமானது வேண்டு கோட்கிணங்கி ஆரூரர் சேரமானுடன் மேற்றிசை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் திருக்கண்டியூரை வணங்கிச் செல்லும்போது எதிரிற் காவிரிக்கு வடகரையிற் பூலோக சிவலோகமாகும் திருவையாறு எதிர்தோன்றக் கண்டு இருவரும் உடலுருக உள்ளுருகக் கைதொழுஉப் பரவிக் கடல்போலப் பரந்து

செல்லும் காவிரியைக் கடந்தேறிச் சென்று தொழ நினைத் தனர். சேரர் பெருமானும் "திருவையாற்றைத் தொழ என் மனம் பெரிதும் அவாவுகின்றது. ஆற்றைக் கடந்து போவோம்" என்றனர். ஆறோ ஓடஞ் செல்லு தற்குங் கூடாத தாய் இருகரையும் புரண்டு விண்ணில் எழுவது போலப் பயங்கரமாய் இருந்தது. இதைக் கண்ட ஆரூரர் சிவபிரானைத் தியானித்துப்,

> "பரவும் பரிசொன் றறியேனான் பண்டே யும்மைப் பயிலாதே
> யிரவும் பகலு நினைந்தாலு மெய்த நினைய மாட்டேனான்
> கரவி லருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
> யரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய வடிகளோ."

(77-ஆவது திருப்பதிகம்)

எனவரும் திருப்பதிகத்தைப் பாடினர். இங்ஙனம் "ஐயா றுடைய வடிகளோ" என ஆரூரர் கூவி யழைப்பதைக் கேட்ட இறைவனும் கன்று தடையுண் டெதிரழைக் கக் கதறிக் கனைக்கும் பசுப்போல, யாவருங் கேட்க "ஓலம்" என மொழிந்து காவிரியின் நீத்தம் இருபாலும் விலகு மாறு செய்வித்து மேற் பாகத்து நீர் பளிங்குமலை போல அப்படியே நிற்கவும், கீழ்ப் பாகத்து நீர் வழிந்து செல்லவும் ஆற்றின் மத்தியில் மணற் பரப்புத் தோன்று மாறு செய்தனர். இதைக் கண்ட திதொண்டர்கள் தமது கண்கள் ஆநந்த மழை பொழிய கைகள் ஆஞ்சலி கூப்ப நின்று ஹர ஹர என முழங்கினர். நம்பி திருத்தாளிற் சேரமான வீழ்ந்து வணங்கினர். நம்பியும் சேரமானை எதிர்வணங்கிச் சிவபிரான் உமக்கு அருளிய திருவிளையாட லன்றோ இது என்ன, இருவரும் மகிழ்ந்து ஏனைய தொண் டர்களுடன் யாற்றின் நடுவழியே சென்று பஞ்ச நதீ சுரரை வணங்கினர். பின்னர், சென்ற வாறே காவிரியின் நடு வழியே மீண்டனர். காவிரியில் மலைபோலத் தடை பட்டு நின்றிருந்த நீர் முன்போலத் தொடர்ந்து பெரு கிற்று, "ஐயாறுடைய அடிகளி"ன் பெருமையை வியந்து நம்பியாரூரரும் சேரர் பெருமானுடன் கொங்கு நாட்டைக் கடந்து மலை நாட் டெல்லையுற, அங்குள்ளா ரெல்லாம் தத்தம் ஊர்களைக் கமுகு, வாழை முதலிய நாட்டித் தோரணங் கட்டிப் பந்தர்கள் அமைத்து அலங்கரித்து, அட்ட மங்கலங்களுடன் இவர்களை எதிரேற்று வணங்கினர்.

இவ்வாறு, கொடுங்கோளூர் சென்று அங்கிருந்து திருவஞ்சைக்களஞ் சேர்ந்தனர். ஆரூரர் அங்குத் திருக்கோயிலை வலம் வந்து இறைஞ்சி,

"முடிப்பது கங்கையுந் திங்களுஞ் செற்றது மூவெயில்
நொடிப்பது மாத்திரை நீறெழக் கணை நூறினார்
கடிப்பது மேறு மென் றஞ்சுவன் றிருக்கைகளார்
பிடிப்பது பாம்பன்றி யில்லையோ வெம்பிரானுக்கே"

எனவரும் (44-ஆவது) திருப்பதிகத்தை யருளினர். பின்னர்ச், சேரர் பெருமானும் ஆரூரரை அலங்கரித்த யானை மீது ஏற்றித் தாம் அவர் பின்பு உட்கார்ந்து அவருக்குத் தாமே சாமரை வீசி ஊர்வலம் வந்தனர். இக் காட்சியைக் கண்ட ஜனங்கள் நமது சேரர் பெருமாளுக்கு நல்ல தோழப் பெருமாள் இந்த நம்பி எனவும், எல்லையிலாத தவத்தை நாம முன்பு செய்த பயனுலல்லவோ இவரைத் தொழுதுய்யும் பாக்கியம் நமக்கு இன்று கிடைத்ததென வும், இந்த மலை நாட்டுக்கு வேறு செல்வம் இனி வேண்டுவ தொன்றில்லை யெனவும், "ஆ! ஆ! பெருமாள் செய்யும் திருப்பணியைப் பாரீர் பாரீர்" * எனவும் பலவாறு வியந்து கூறினர். பூவும் பொரியும் பொற்றுகளும் வீசிப் பொழிந்தனர். பின்னர், அரண்மனை சேர்ந்ததும் ஆரூரரைச் சிம்மாசனத் திருத்தித் தமது தேவிமார்கள் கரகநீர் எந்த அவரது பாத மலர்களை விளக்க, ஆரூரர் இது தகா தெனக் கூறித் திருவடி களைப் பின்வாங்க, சேரர் பெருமான் ஆரூரர் தம் திருவடியில் வீழ்ந்து, 'இது தகும், தகும், நாங்கள் செய்வதற் கெல்லாம் தாங்கள் இசைய வேண்டும்' எனக் கூறி வேண்டச், செய்வழி வேறில்லாது ஆரூராரும் சும்மா இருந்தனர்—பின்னர் ஆரூராருக்குத் திருவமுது செய்வித்து நித்தியோபசாரஞ் செய்து வந்தனர்.

---

* நல்ல தோழர் நம்பெருமாள் தமக்கு நம்பி யிவரென்பார்
எல்லை யில்லாத் தவமுன்பென் செய்தோ மிவரைத் தொழ வென்பார்
செல்வ மினியென் பெறுவதினிச் சிலம்பு நாட்டுக் கெனவுரைப்பார்
சொல்லுந் தரமோ பெருமாள் செய் தொழிலைப் பாரீ ரெனத் தொழு [வார்
(பெரிய புராணம்)

(இன்னும் வரும்.)

நங்கையின் நிருபம்

ஸ்ரீமாந் தி. ரா. ஸ்ரீநிவாசன் எழுதியது.

(495-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப விஷயத்தில் நீ எப்பொழுதும் சிக்கனமாயிரு. அவ்வாறே உனது கணவனையும் இருக்குமாறு அன்போடும், வணக்கத்தோடும் ஏகாந்தத்தில் வேண்டிக்கொள். இதனால் உலோபகுணம் உன்னிடம் அமையவேண்டுமென்பது என் நோக்கமன்று. இது குளிக்கப் புகுந்தும் சேற்றை வாரிப்பூசிக் கொண்டதையே ஒக்கும். சிக்கனம் என்றால் செய்யலான செலவுகளை வரையறையோடு செய்தலும், வீணான செலவுகளையும், அளவு மீறிய செலவுகளையும் ஒழித்தலும், வருமானத்திற்கேற்ப குடும்பத்திற்கான பொருள்களைத் தக்க காலத்தில் (மலிவாக இருக்கையில்) வாங்கி, அவைகளை எதிர்காலத்திற்கு வேண்டுமென்ற நோக்கத்தோடு சாக்கிரதையாய்ச் செலவழித்தலுமாம். இவ்வாறு சிக்கனமாயிருத்தல் நல்ல பெயரையும், நற்பயனையும் அளிக்கும். ஆகவே, உலோபகுணத்தை அறவே நீக்கி, செயற்பால புண்ய கிருத்யங்களையும், மற்றும் இதர தர்ம காரியங்களையும் நீயும் உனது காதலனும் கருத்தொருமித்து ஆதரவுடன் செய்யவேண்டும். தாய் வழிச்சுற்றமோ, அன்றி கணவன் வழிக்கிளைஞரோ உனது சமரச பாவத்தைக் கண்டு மெச்சுமாறு நடக்க வேண்டும்.

உனது மாமியார், நாத்தனார் முதலியோர் உன்னைத் தூஷித்தாலும், அடித்தாலும் நீ பொறுமையுடன் இருக்கவேண்டுமேயன்றி, இவற்றை உன் கணவனிடம் சொல்லக் கூடாது. இவ்வாறு செய்வையேல் உன்மீது கணவனுக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படமாட்டாது.

தலைவனுக்கு வெறுப்பான காரியங்களை நீயும் விட்டொழித்து அவனுக்கு விருப்பானவற்றை (உனக்கு வெறுப்பாயிருப்பினும்) மேற்கொள். அப்படியல்லாது, 'அடம்' மிகுந்து தங்கள் பிரியப்படியே நடந்து தீர வேண்டுமென்று பிடிவாதஞ் செய்யும் மாதரார் கணவனது வெறுப்பே பெருக்குவராதலின், நீ உனது புருடன் விருப்பிற் கிசைய நடக்கும் உத்தமியாய் இலங்கு. அவனுக்குப் பிரியரான எவரையும், நீயும் மனங்களிக்க உபசரி. அவனது நண்பர்களை மனங்கோணுவாறு நடத்தி உனது அன்பனது அருளைப் பெறு. அன்னாரைப் பற்றிய குணங்களை நீ அவனுக்கு விவரித்து வெறுப்பைத் தேடிக் கொள்ளாதே.

தனியே வெளியிற் செல்லுதல், ஆடவர் குழாத்தில் நாணமின்றிப் போதல், பேசுதல், அன்னிய ஆடவரோடு அனுவசியமாய்

உரையாடல், கேலி பேசுதல், நகைத்தல், உரக்கப் பேசல், ஆடை யணி முதலியவற்றால் அலங்காரஞ் செய்துகொண்டு அன்னியர் கண்களைக் கவரும் வண்ணம் தேவாலயம் செல்லுதல், கணவன் அனுமதியின்றித் தனது அந்தரங்க நேசிகளின் வீட்டிற்குச் செல்லல், வாசலில் உட்காருதல், கெட்ட வார்த்தைகளைப் பேசுதல், மச்சு, வீட்டைச் சார்ந்த தோட்டம் இவைகளில் வெகு நேரம் தனியே யிருத்தல் ஆகிய இத் துர்க்குணங்கள் உன்னிடம் நெருங்காமல் கவனமாயிரு. அன்றியும் துர்ப்புத்தி சொல்லல், கோட் சொல்லு தல், கடும்பார்வை முதலியனவும் அமைய வேண்டா. கணவன் அனுமதியின்பேரில் உனது மாமியார், சினேகிதைகளோடு ஜனக் கூட்டம் நிறைந்த திருவிழா, விருந்து முதலிய நடக்கும் இடத்திற் குச் செல்லலாம். அன்றி அவன் அழைத்தாலும் அவன் கூடச் செல்லலாம்.

உனது ஆர்வலன் உன்னிடம் ஏகாந்தமா யிருக்கும்பொழுது தனது பிரதாபம், எடுத்த காரியம் இனிது முடிக்கும் ஆற்றல் இவை களை எடுத்துக் கூறுவனாயின், நீ அவைகளை அவாவுடன் கேட்டுப் பூரித்துப் புளகாங்கிதமுறவேண்டும். தன் இரகசியங்களை எடுத்து உரைத்தால் நீ அவைகளுக்குத் தக்கவாறு ஆலோசனை சொல்ல வேண்டும். உன்னுடைய அந்தரங்கங்களை அவனுக்கு வெளியிட்டு அவன் புத்திமதியின்படி நடக்கவேண்டும். அவனுடைய இரகசியங் களை நீ நன்றாய்ப் பாதுகாக்க வேண்டும். உன் கணவன் எத்தகைய அறிவீனனாயினும், இழிந்த குணமுடையவனாயினும், அவனது குடும்பம், நடத்தை, கல்வித்திறன் குலப் பெருமை, அழகு, புக்ககம், நண்பராதி சுற்றச் சார்பு, உன்னிடம் அவனுக்குள்ள மட்டற்ற அன்பு இவற்றை மேன்மையுடனும், வணக்கமாகவும், பிறரிடத்து உரைக்க வேண்டும். அவன் எத்தொழிலில் திறமையுள்ளவனோ அதைச் செய்யச் சொல்லி தனித்திருக்கும் சமயத்தில் கண்டும் கேட்டும் களிக்கலாம். உதாரணமாய், உனது கணவன் சங்கீதப் பயிற்சி பெற்றவனாயிருக்கலாம். அவ்வாறிருப்பின் நீ அவனைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வெய்தலாம். உன்னுடன் அவன் பிரியமாய்ப் பேசிக் களிக்க உடன்பட்டால் நீ குதூகுலமாய் அவ னுடன் அளவளாவியும் ஹாஸ்யமாய்ப் பேசி இன்பூட்டியும், மிருது வான குரலில் கடவுளைத் துதிக்கும் பாக்களையோ, நாயகனை ஏற்றும் செய்யுட்களையோ பாடி அவனைக் களிப்பித்தும் அவன் அன்பைப் பெறலாம். மற்றும் பலவாறாகவும் உனது அன்பை செய்கைகளால் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் எடுத்துக் காட்டி அவன் அருள் பெறலாம்.

ஆனால் கணவன் வியாகூலத்தோடிருக்கையில் அவனுக்குத் தேறுதல் கூறியும், அன்புடனும், மனக் கலக்கத்துடனும் பரிந்து நோக்கியும், அவன் துயரம் நீங்கித் தைரியமும் சந்தோஷமு மடை யும்படி செய்ய வேண்டும். 'உடுக்கை யிழந்தவன் கை போல்'

கணவன் தான் செய்த ஒரு முயற்சியில் தவறிப் போய் அல்லது காரியத்தில் அபஜயமடைந்து விசனத்தோடும், ஆழ்ந்த சிந்தனையோடும் மனைக்குத் திரும்பி வருங்கால் அவனுக்குத் தேறுதலுரைகள் புகன்று அவனது துயரையொழிக்க நல்லாலோசனைகளைக் கழறி அவனது துயரைப் போக்க முற்படவேண்டும். அப்படியில்லாமல், அவன் ஜெயத்தோடு திரும்பி வந்தால் அவனோடு கூடிக் குலாவிக் களிப்பதும், அபஜெயப்பட்டு முகவாட்டத்தோடும், துயரத்தோடும் வரின் தாங்களும் முகத்தைச் சுழித்தவண்ணம் பல கடுகடுப்பான வார்த்தைகளைக் கூறி 'புண்ணிற் கோலிட்டாற் போன்று' அவனை இன்னும் துன்பத்திலாழ்த்தும் மாதர்கள் பேய்களேயன்றி வேறல்லர். ஆதலின், இன்னோர் போலன்றி அவனுடன் தானும் வருத்தமுற்று, தகுந்த ஆலோசனைகளைக் கூறுவதுமன்றி, கடவுளையும் தன் நாயகன் வருத்தம் ஒழித்துச் சுகம் பேணுமாறு துதிக்க வேண்டும். உனக்கு ஏதேனும் வியாகூலம் இருப்பின் அதை வெளியிட்டு அவன் மனதை வருத்தத்திற்கு உள்ளாக்காமல் உனக்குச் சிறிது தேக அசௌக்கியம் எனக்கூறி அதை அவனிடம் கூறுதொழிய வேண்டும். இவ்வாறே, வருத்தம், பிணி, ஆபத்து இவைகளுற்ற பொழுதும் அவன் அருகிலேயே இருந்து, தானும்கூட இரங்கி ஆடை அணி, முதலிவற்றால் தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல் அவனது க்ஷேமமே நாட்டமாய் இறைவனை மனமாரப் போற்றிப் பரவவேண்டும். தனது நாயகனுக்கு வாழ்வு, கருதிய கருமம் கை கூடல், நோய் நீங்கி ஆரோக்யம் இவைகள் உற்றிடுங்கால் தனது இஷ்ட தெய்வங்களுக்கு வந்தனையோ அல்லது கோரிய பிரார்த்தனையோ செய்து முடிக்க வேண்டும்.

கணவன் உன்னைப் பலர் முன்னிலையில் இகழ்ச்சியாகக் கூறினாலும், கடிந்துகொண்டாலும் நீ வாளாவிருந்து மேன்மேலும் உன் அன்பைப் பெருக்கிக் கொண்டு போவதே உத்தம மாகும்.

கணவன் முன்னிலையிலும், அல்லது அவனது நண்பர், பந்துக்கள் முன்னிலையிலும் நீ உட்கார்ந்திருக்காதே. அவர்கள் உட்காரச் சொன்னால் கூட "பாதகமில்லை" என்று சொல்லி விடு. 'சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையன்றோ' என்றபடி ஆடவர் முன்னிலையில் எழுந்து நிற்றலையே நீ பழக வேண்டும். சாதாரண நாட்களிலோ அன்றி விசேஷ காலத்திலோ வரும் விருந்தினரை உனது பர்த்தாவுடன் நீயும் அன்புடன் வரவேற்று முக மலர்ந்து உபசரிப்பாயாக. எவரிடத்தும் சமமான உபசரிப்பையும், அன்பையும் காட்டுதலை மேற்கொள்.

கணவன் அவனது நண்பர்களிடமோ அல்லது பந்துஜனங்களிடத்தோ பேசிக் கொண்டிருக்கையில் அவர்களுக்குப் பின் புறம் மறைவாய் நின்று அவர்கள் பேசுவதைச் செவியுறவாவது, அல்லது கூப்பிடவாவது கூடாது. அப்பொழுது குழந்தைகளை அன்னாரிடம்

செல்ல விடுதலாவது அன்றி அழவிடவாவது தகாது. இவ்வாறு செய்வதால் அவர் தம் சம்பாஷணைக்குப் பங்கம் நேரிடலாம். அது காரணமாகக் குழந்தைகள் பேரிலும், உன் மீதும், உன் கணவனுக்குக் கோபம் உண்டாகக் கூடும்.

புருடன் வீட்டிற்குச் சென்ற நாள் முதல் விசேஷ காலங்களைத் தவிர வேறு எச்சமயத்திலும் அநாவசியமாகத் தாய்வீடு அடிக்கடி செல்ல ஒரு பெண் விரும்பலாகாது. சுபாசுப காலங்களிலும் கணவன் உத்தரவு பெற்றே அல்லது அவனோடு கூடவோதான் வரவேண்டும். எப்பொழுதும் பர்த்தாவைப் பிரிந்திருக்க இடம் வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படியே பிரிந்திருக்க நேரிடினும் அக்காலத்தில் மங்களமாத்திரமான ஆபரணங்களை மட்டும் அணிய வேண்டும். மற்றைப்படி, அழகிய ஆடை தரித்தல், விசேஷமாய் நகைகளணிதல், விளையாட்டு, சிரிப்பு, நல்ல போஜனம் இவைகளைத் தவிர்க்க வேண்டும். நாடோறும் கணவனைப் பற்றிய ஞாபகமே உடையவளாயிருக்க வேண்டும். கூடிய சீக்கிரம் எப்பாடுபட்டேனும் அவனை அடைய முயற்சிக்கவேண்டும். தாய் வீடே நாட்டமாக வுள்ள பெண்ணை யாவரும் வெறுத் தொழிவர். அன்றி, பர்த்தாவினுடைய உத்திரவின்றி தன் பந்துக்களுக்கு எவ்விதமான பொருளும் கொடுக்கக்கூடாது. தங்காய்! இவைகளை நீ நன்கு மனமிருத்திக் கொள். தாய்வீட்டார் மூலமாவது, வேறு எவ்வித நியாய வழியாலாவது உனக்குக் கிடைக்கலாகும் பொருளை உனக்கென வைத்துக் கொள்ளாது கணவனிடமே யளித்துவிடு.

நகை, பணம், இவற்றில் ஆசையில்லாமல் அவற்றில் கௌரவமாவது, பெருமையாவது இல்லை என்று அவற்றை அலட்சியம் செய்து ஒழி. 'நகை, நகை' யென்று சொல்லி உன் கொழுநனுக்கு வருத்தம் விளைக்காதே. இதற்கு மாறாக, அவனாக மனம் உவந்து உனக்கு வாங்கி யளித்த ஆடைகளைக் கொண்டும், செய்து கொடுத்த அணிகளைக் கொண்டும் மனத்திருப்தி யடை. இவைகளை உனக்கு அளித்ததற்காக அவனை நீ புகழ்ந்து பேசு. இவ்வாறு செய்வையேல் உன்மீது அவனுக்கு மட்டற்ற அன்பு உதித்து இயன்றவரையில் உனக்கு வேண்டிய ஆபரணங்களையும், உடைகளையும் செய்தும், வாங்கியும் கொடுப்பான். ஆகவே, கணவனுக்குத் தெரியாமல் அவன் வருவாயினின்றும் நகைகளுக்காக ஒன்றும் சேர்க்காதே. வீட்டுச் செலவுக்கு என உனது புருடன் உன் கையில் கொடுத்த பணத்தைக் கொண்டு வீட்டுக் காரியங்களைச் செய்து முடிப்பது மல்லாமல், அப்பணத்தில் சிறிது மிச்ச மிருக்குமாறு புத்திசாலித் தனமாய்ச் செலவிட வேண்டும். இதற்காக, தானத்திற்கெனக் கொடுத்த பணத்தை ஆசை மேலீட்டால் மிச்சப்படுத்தக் கூடாது. சிறிது எஞ்சுமாறு சேர்த்து வைக்கும் இப்பணம் முட்டுற்ற காலத்து உதவும். உனது புத்திசாலித் தனத்துக்காக உன் கணவன் உன்னை மெச்சுவான்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற இந் நால்வகைக் குணங்களும் நினது கற்புக்குக் காவலாய் இருக்கட்டும். ஐம்புலன் களின் உதவிகொண்டு நீ நல்வழியில் நட. சற்பெண்டிருடைய சகவாசமே நீ போற்றற்பாலது. பிச்சைக்காரி, சந்நியாசினி, கெட்ட நடத்தையுள்ளவள், குறிசொல்பவள், மருந்திடுபவள் முதலானவர் களோடு நீ எத்தகைய சம்பந்தமும் வைத்துக் கொள்ளாதே. ஏனெனில் இவர்கள் நடத்தை இழிவாதலின், குலஸ்திரியாகிய உனக்கு இவர் தம் நட்பு பெரிதும் இன்னலையே விளைக்கும்.

உன் கொழுநன் ஏதேனும் விரதத்தை அனுட்டிக்கப் புகுவா னேல், நீ அவனுக்கு நேரிடலாகும் சிரமத்தை, வீட்டில் சுகமே வீற்றிருக்கும் நினக்கே அவைகள் மிகவும் கஷ்டமானால், குடும்பப் பாதுகாப்பினிமித்தம் ஓடியாடித் திரிந்துழலும் அவனுக்கு அவை அவ்வளவு சிரமத்தைத்தரா என்று கூறுதலால் இனிது விளக்கியும், அவற்றை அவன் அனுட்டியாதொழிவதால் நேரும் பாபத்தை நீ ஏற்றுக்கொள்ளுவதாயும் புகன்று அவனது தேகப் பராமரிப்பில் கருத்தாயிரு. இவ்வாறு நீ சொல்லுவதை அவன் கேட்காத விடத்து நீயும் அவ்விரதங்களை அவனுடன் கூட அனுட்டிக்கக் கடவை. நீ தனியாக விரதம் எதையும் உன் கணவன் மேற்கொண்டு ஒழுகாத விடத்து அனுட்டிக்கக் கூடாது. பர்த்தாவைப் பேணுதலை விடச் சிறந்த விரதம் மகளிர்க்குக் கிடையாது எனவே நூல்கள் கூறுகின்றன.

"கொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வான்தவ மாற்றுதல்
தொழுது தெய்வம் பராய் மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே."

என்ற மேலோர் வாக்கு ஈண்டு சிந்தித்திடற் பாற்று.

மஞ்சளும் நறுஞ்சுண்ணமும் சேர்த்துத் தேய்த்துக் குளித்த வளாய், அழகும் தூய்மையும் பொருந்திய ஆடைகளும், கவின்பெறு அணிகளும் அணிந்தவளாய், கண்ணில் அஞ்சனமும், நெற்றியில் திலகமும் இட்டவளாய், நாற்றமுடை மலர், சந்தனம் இவைகளைப் பூண்டவளாய், வகிர்ந்து சிக்கறுத்து வாரிமுடித்த கூந்தலும், தரள மன்ன பற்களின் காந்தியும், பவளவிதழினூடே அரும்பும் புன் முறுவலும் விளங்கும் மதி நிகர் ஆனனமும் கொண்டவளாய் நீ உனது பர்த்தாவுடன் தனித்திருக்கையில் விளங்குவாயாக. ஸ்திரீ களின் அலங்காரம் கணவன் கண்டு களிப்பதற்கேயன்றி, ஊரார் பார்க்கும் பொருட்டும், தற்பெருமைக்காகவு மன்று என்பதை நீ நன்கு உணர்ந்து கொள். இவ்வாறு நீ இலங்குவதால் உன் கணவன் உன்னைப் பெரிதும் விரும்புவான்.

நங்கையின் நிருபம்

உறவினரின் வீட்டில் நிகழும் கலியாணம் முதலானவும், உன் நேசிகளின் அகங்களில் நடக்கும் மன்றல் முதலியவுமான சுப காரியங்களுக்கு நீ நின் கணவன் அநுமதியின்மேல் சென்றால் அங்கு உள்ளோரை நினது இனிய பாட்டுக்களால் களிப்பித்து "இன்னாருடைய மனைவி'' என்று அவர்கள் உன்னை வியந்து குறிப்பதால் உன் கணவனுக்கு ஒரு பெருமையைத் தேடிக் கொடு. பாடும் பாடல்களில் நின் கணவன் பெயரையும், வீட்டுப் பெயரையும் குறிப்பாய்ச் சேர்த்துப் பாடு.

"திருவிளக்கு ஏற்றித் தொழுகை'' மடவார்க்கு இன்றியமையாதது. கணவனது வீடு இலக்ஷ்மிகரமாக இலங்க வேண்டுமாறு செய்வது குலமாதொருத்தியின் செய்கை யாதலின், அவள் இச் சீரிய ஒழுக்கினை மேற் கொள்ளவேண்டும். திருவிளக்குப் போற்றலால் கணவனுக்குத் திருவின் திருவருள், ஆயுள், ஆரோக்கியம் இவற்றின் நீட்சி ஆகிய இவைகள் கைகூடும். ஆகையால், தங்காய்! நீ நினது கேள்வன் "மனையினை விளக்கவந்த மடக்கொடியாய்'' மிளிர்வாயாக.

கணவனை விட்டுத்தனியாக ஒரு கணமும் நீ இருக்க விரும்பவில்லையென்றும், அவனை இம்மை மட்டுமேயன்றி மறுமையிலும் சேர அவாவுள்ளவளாய் இருக்கின்றனை என்பதையும் நீ உனது அன்பு ததும்பிய ஒவ்வொரு செய்கையிலும் வெளிப்படக் காட்டுவாயாக. உலகத்தார் பெண்களை மதிப்பதெல்லாம் அவர் தம் கணவரை முன்னிட்டுத்தான். ஆதலின், கணவன் இறக்கு முன்னரே மரிக்க விரும்புதலே, சுமங்கிலியாய் இறக்கக் கோருதலே கற்புடைப் பெண்டிரின் உத்தம இலக்கணமாகும். இவ்வாறான அஞ்சலே நேரவேண்டுமாய் நினது இஷ்ட தெய்வத்தினைப் போற்றிப் பரவு. "உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பினருமை'' என்பதற் கேற்பக் கணவன் மேன்மையை நன்கு உணர்ந்து, புருடனுடன் கூடிக்குலாவும் வாழ்க்கையின் சீரியபான்மையை உய்த்தறிந்து, அவனை விட்டு ஒரு கணமும் அகலாது வசித்து அவனுக்கு ஆற்றலாகும் தொண்டினை யெல்லாம் செய்துவரத் தவறாதே.

இதுகாறும் யான் கூறிய யாவும், நம் முன்னோர்கள் அனுட்டி வந்தவையேயாம். இவைகள் ஒவ்வொன்றும் சிந்தித்திடத் தக்க சிந்தாமணிகள். ஒவ்வொன்றிலும் பல உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. இவை இம்மை மட்டுமே யன்றி மறுமையினும் பயனூட்ட வல்லன. யான் கூறவந்தது ஒருவாறு முடிந்துவிட்டதாயினும்,

"கற்புடுத் தன்பு முடித்து நாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே

றென்பதோர் செல்வமு முண்டாயினில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு."

என்பதையும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்றும்,

"இல்லற மல்லது நல்லற மன்று"

எனவும் இருப்பதையும் கருதி, நீயும், நினது காதலனும் தீதில கருமம் புரிந்து சுகவாழ்வு துய்க்குமாறு எல்லாம் வல்ல பரம்பொருள் அருள் சுரக்க வேண்டி அவனடிக் கமலம் சிந்திக்கின்றேன். கணவனுக்கேற்ற காரிகையாய், மங்கையர் திலகமாய், தேசபக்தி தவழும் வனிதையாய், பெறற் பால யாவும் உற்ற ஆரணங்காய் நீ இலக வேண்டுமாய் விழைகின்றேன். நீ கேட்டுக் கொண்டபடியே இன்னும் ஒரு வாரத்தில் அங்கு வரப்போகும் தம்பி ஸ்ரீநிவாஸன் மூலம் "பக்த விஜயமும்" "பதிவிரதைகள் சரித்திரமும்" வாங்கியனுப்புகிறேன். குற்றங்களைந்து குணங்கைக் கொள். வேறு விசேடமிலது.

இப்படிக்கு,
உன் அருமை ஸகோதரி,
சண்பக வல்லி.

ஆங்கிலேயர்கள் 5280 அடி நீளத்தை ஒரு மைல் என்று கணக்கிடுகிறார்கள். ஜெர்மனியில் ஒரு மைல் என்பது ஆங்கிலேய மைலைவிட நாலுபங்கு பெரிதாம். ப்ரான்ஸ் தேசத்தில் லீக் என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். அது மூன்று ஆங்கிலேய மைலாம். ருஷியாவில் ஆங்கிலேய முக்கால் மைலை வெர்ஸ்ட் என்று கணக்கிடுகிறார்கள். ஸ்வீடன், டென்மார்க் ஹங்கரி முதலிய தேசங்களில் ஆறு ஆங்கிலேய மைல் கொண்டது ஒரு மைல். நமது தேசத்தில் ஒரு நாழிகை வழி தூரம் என்பது $1\frac{1}{4}$ மைலும் காதவழி தூரம் என்பது $1\frac{1}{2}$ மைல் கணக்கு, ஐர்லாந்திலும் ஸ்காட்லண்டிலும் மைல் என்பது ஆங்கிலேய $1\frac{1}{2}$ மைல்.

மற்ற ஜந்துக்களைப்போலில்லாமல் ஆந்தைக்கு கண்களை அசைக்க முடியாதாம். ஆகையால் பின்பக்கம் முன்பக்கம் எல்லாம் திரும்பிப் பார்ப்பதற்காக ஈச்வரன் அதன் தலையை நன்றாய் சுற்றும்படி அமைத்திருக்கிறாராம்.



தேசீயக்கவி சுப்ரமண்ய பாரதியார்.

கதிர்காமம்

ஸ்ரீமாந் கோயமுத்தூர் C. K. வீரைய நாயக்கர் எழுதியது.

ஸ்ரீ அகண்டாகார சச்சிதாநந்த சொரூபமாய் விளங்காநின்ற தனிமுதற் கடவுளின் திருவடிப்பே றெய்தியவரும், அருளும், பொருளும் நிறைந்தவருமாகிய சுத்த சித்தவான்களே! பகவத் ஸ்மரணையிற் பகலவன்போல் கிரணந்தெளிந்தோர்களே! அவனியிற் அரிய பொருள் கண்ணுற்றுள்ள தவச்ரேஷ்டரான பெரியார்கள் கூறிய, பல நூல்களுள் அடியேன் சில நூலாராய்ந்தவரை, ஸ்ரீகந்த மகாபுராணத்தில், தக்ஷிண கைலாயமான்மிய முரைக்கு மிடத்திலே 9, 10, 11 ஆகிய மூன்று அத்தியாயங்களில், கதிர்காம மகிமையைக்குறித்து கூறப்பட்டிருக்கிறது. அவை வடமொழியில் உள்ளனவாகையால் வடமொழி உணர்ச்சியற்ற பலபக்த சிரோன்மணிகள் கதிர்காம மகிமை இன்னதென் றறியப்படாமல் இருக்கின்றனர்க ளென்றும், இவ்வரிய செய்தியை எவ்விடமும் மலிவுறச் செய்யவேண்டு மென்றும், சதாசிந்தையாக இருந்த யாம் இதமுறத்தக்க சில நூலுணர்ந்தும், அதனுதாரங் கொணர்ந்தும், வண்டுகளானவை உண்ட தேறலையொன்ருய்த் திரட்டியதற்கு காரணம், பலமலர்கள்போல, அலகில் சோதியை பலர் உணர்ந்து இலகுகாத்த கிளியைப்போலிராமல் ஒளியைத் தெளிந்தொழுகுமாறு இறைஞ்சுகின்றனன்.

கதிர்காம மென்னும் புண்ணிய ஸ்தலத்தை எதிர்கொண்டடியேன் 26-5-24 சோமவாரம் சென்று நேமமுடன் தொண்டுசெய்து கண்டபலன் பிரத்திய்க்ஷமேயாம். இனிமேல் வரையப்படும் தனித்தனி சஞ்சிகையில் வரும் ஸ்கந்தத்தின் செய்தி ஓதவாயில் அமிர்தநீர் ஊறும், செவிகொடுக்க கர்ணுமிர்தம், கண்ணுற நேத்திராநந்தம், மனதில் எண்ணதேவாமிர்தம். தெவிட்டாத தேன்கனியாகிய இவை, பனிரெண்டு இதழ்களில் பிரசுரித்து முற்றுப்பெறச் செய்யப்படும்.

இவ்வைபவ நிகழ்ச்சிகள் மேலவர் நூல்களாலும், நேரில் கண்ணுற்ற அனுபவ காட்சிகளாலும், இக்காலத்தில் இப்பரதகண்டத்தில் ஸ்திரவாசஸ்தல ,மென்பவை கதிர்காமமேயாம். பக்தி என்பது இன்னதென்றறியாத சுத்தமூடனுக்கும் இந்த ஸ்தலத்திற்கு அப்பாலுள்ள 10 மைல் தூரத்திலிருந்தே தனக்குள் ஓர் பூரணநம்பிக்கையான எண்ணம் திண்ணமாய் வருகிறது. பல்லாயிரம் பேர் பிரவேசித்தாலும் அவ்வண்ணமேதான்.

நேயர் பிரதி மாதா மாதம் நமது லக்ஷ்மியை கைவிடாது கண்ணுறுவரேல் இப்பேராநந்தங் கைகொண்டு என்றும் பொன்ருத ஆன்மார்த்தத்தை அடைவார்கள்.

முரசொலி

சென்ற மாதத்தில் சுவாமி சிரத்தாநந்தர் வைக்கத்துக்குச் சென்றிருந்த பொழுது, சில ஈழவர்களை, ஆரிய சமாஜ விதிப்படி சுத்தி செய்து, தமது சமாஜத்தில் சேர்த்துக கொண்டார். ஆனால் அவ்வாறு ஆரிய சமாஜிகளான ஈழவர்களை வைக்கம் ஆலயத்தை யடுத்த பாதைகளில் நடமாட அதிகாரிகள் சம்மதிக்க வில்லையாம். கிறிஸ்தவராகவோ மகமதியராகவோ மதம் மாறின ஈழவர்களைத் தடுக்காத திருவிதாங்கூர் ஹிந்து துரைத்தன அதிகாரிகள் ஆரிய சமாஜியான ஈழவரைக் தடுப்பது இந்து மதத்துக்கே ஒரு பெரிய இழுக்காகும். ஏனெனில் வைதீக இந்து மதமே ஆரிய சமாஜம்.

***

டெல்ஹியிலுள்ள குவஜாஹாசன் நிஜாமி என்பவர் மகாத்மா காந்தியை இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி அழைத்து ஒரு புத்தகம் எழுதி யிருக்கிறாராம். அதற்குப் பதிலாக லாகூரிலுள்ள பிரபல ஆரிய ஸமாஜ உழைப்பாளரும் பத்திரிகாசிரியருமான லாலா சிரஞ்சிலால் என்பவர் "மகமதலிக்கு சுத்தி" என்று உருது பாஷையில் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டு, வேதத்தை ஆதார மாகக் கொண்ட இந்து மதத்தைத் தழுவி இந்துவாக வேண்டு மென்று மகமதலியை வேண்டிக் கொள்கிறாராம். இந்திய ராஜீய வான மண்டலம் புயற் காற்று மயமாயிருக்கும் இத்தருணத்தில் இத்தகைய வேடிக்கைகள் விரும்பத் தக்கனவே.

***

ஸர் சங்கரன் நாயர் மீது ஸர் மைக்கேல் ஓட்வியர் தொடுத் திருந்த மான நஷ்டதாவாவில், மான நஷ்ட ஈடாகவும் தாவாச் செலவுக் காகவும் சுமார் 4 லட்சம் ரூபா ஸர் சங்கரன் நாயர் ஸர் மைக்கேல் ஓட்வியருக்குக் கொடுக்க வேண்டு மென்று ஜஸ்டிஸ் மக்கார்டி தீர்ப்புச் செய்திருக்கும் விஷயம் நேயர்கள் அறிந்திருக்க லாம். துன்பம் வந்தால் தொடர்ந்து வரும் என்றபடி, லக்கடி என்னுமிடத்தில் திருவில்லுவாமலைக் கோவிலுக்கு எதிரில் ஸர் சங் கர நாயர் கட்டியிருந்த மனோஹர மான மாளிகையின் ஒரு பகுதியும் சமீபத்தில் பெய்த பெருமழையால் இடிந்து விழுந்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. 'காந்தியும் சுராஜ்யமும்' என்ற நூலெழுதிய ஸர் சங்கரன் நாயருக்கு மேலே கூறிய இரண்டும் தெய்வ தண்டனையே போலும்!

***

ஓமலூர்த்தாலூகா ஆதி திராவிடர்களின் முதல் மகா நாடு கமலாபுரத்தில் இம்மாதம் 15உ வெகு விமரிசையாக நடைபெற்றது. அப்பொழுது தலைமை வகித்த ஸ்ரீமாந் கே. வி. சுப்பராயர் கூறிய

சிலவிஷயங்களை நாம் ஆராயவேண்டியது அவசியமெனத் தோன்று கிறது. ஸ்ரீமாந். சுப்பராயர் அவர்கள் தமது முடிவுரைப் பிரசங் கத்தில் ஆதி திராவிடர்களை நோக்கி "தற்காலத்திய பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவில் சென்ற 150 வருஷங்களாக நிலை பெற்றி ருக்கிறது. எனினும் உங்களது முன்னேற்றத்துக்காகவும் தீண் டாமையை நீக்கவும் அத்துரைத்தனம் ஒன்றுமே செய்யவில்லை. காந்தியடிகள் தீண்டாமைக் கிளர்ச்சி இயக்கத்தைத் தொடங்கும் வரை துரைத்தனத்தார் சும்மாயிருக்கக் காரணமென்ன? லோக்கல் போர்டுகளிலும் சட்டசபைகளிலும் சில ஸ்தானங்களை உங்களுக்கு ஒதுக்கி வைத்திருப்பதையெண்ணி மயங்கி விடாதீர்கள். உண்மை யாகவே உங்களது முன்னேற்றத்தில் துரைத்தனத்தார் அக்கறை உடையவர்களாயிருந்தால் உடன் கட்டை ஏறுவதை நீக்குவதற்கு அவர்கள் செய்தது போல் ஏன் ஒரு சட்டத்தை அவர்கள் உண்டு பண்ணியிருக்கக் கூடாது" என்றும் பொருள் படும்படி கூறு கின்றார்.

***

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் காலத்தில் ஆதிதிராவிடர்கள் அடைந்துள்ள நன்மைகள் இன்னின்னவையென்றறியாத ஸ்ரீமாந் ராயர் ஆதி திராவிடர் மகா நாட்டுக்குத் தலைமை வகிக்கத் துணிவு கொண்டது மிக வியப்பே. பிரிட்டிஷ் துரைத்தனத்தாரின் கண்கா ணிப்பு மட்டுமில்லாதிருந்தால் ஆதி திராவிட வர்க்கம் தென்னிந்தி யாவிலிருந்து எடுபட்டிருக்குமென்பதை தென்னிந்திய சமுதாயத் தின் உண்மை நிலைமையை உய்த்துணர்ந்தவர்கள் எல்லாம் ஒப்புக் கொள்வார்கள்.

***

தீண்டப்படாதவராயும் அண்டப்படாதவராயும் நம்மவர் களால் கருதப்பட்டு வந்த ஆதி திராவிடர்களை ஐரோப்பியர்கள் கூச்சமின்றித் தமது பரிசாரர்களாக அமர்த்திக் கொண்டனர். ஐரோப்பியர்களின் இத்தீரச் செயல் மறைமுகமாக ஆதி திராவிடர்களுக்கு சமூக வாழ்வில் ஒரு உறுதி கொடுத்தது. ஐரோப்பியர்கள் எல்லாம் பெரும்பான்மையாக துரைத்தன உத்தி யோகஸ்தர்களாகவும் செல்வாக்குடையவர்களாகவும் இருந்ததனால் அவர்களை அண்டி வாழ்ந்த ஆதி திராவிடர்களைத் துன்புறுத்த நம் மவர்கள் அச்சங் கொண்டனர். ஆகவே ஆதி திராவிடர்களின் துன்பங்கள் காலக்கிரமத்தில் ஒழிந்தன; பல சுதந்தரங்களையும் அவர்கள் அடையலாயினர். பள்ளிக் கூடங்களிலும் அவர்களுக்குப் பிரவேசனம் அளிக்கப் பட்டது. இது தென்னாடு முழுதும் அறிந்த உண்மை.

***

ஆதி திராவிடர்களுக்கும் மற்றும் தீண்டாச்சாதியாருக்கும் பொதுப்பள்ளிக் கூடங்களில் பிரவேசனமளிக்கப்பட்ட காலத்தில்

உயர்ந்த ஜாதி ஹிந்துக்கள் எத்தகைய மனப்பாங் குடையவர்களா யிருந்தன ரென்பதையும் தென்னாட்டாரில் உண்மைப் பற்றுடை யோர் நன்கறிவர். எனினும் ஸ்ரீமாந் ராயரவர்கள் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்துக்கு ஒன்றும் செய்யவில்லை யென்று கூறமுன்வந்தது வெகு விநோதமே.

***

உடன் கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்து வற்குச் சட்டம் ஏற்படுத்தியது போல் தீண்டாமையை ஒழிக்கவும் துரைத்தனத் தார் ஏன் ஒரு சட்டம் ஏற்படுத்தவில்லை யென்கின்றார் ஸ்ரீமாந் ராயர். உடன் கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்துவ தற்குத் துரைத் தனத்தார் தாமாகச் சட்டம் ஏற்படுத்தவில்லை யென்றும், வங்காளச் சிங்கமாகிய ராஜாராம் மோகன்ராய் செய்த கிளர்ச்சியின் பயனாகவே அச்சட்டம் அமுலுக்கு வந்ததென்றும் பள்ளிப்பையன்களும் கூட அறிவார்கள். தற்காலத்தில் சட்டசபை யில் இந்தியர்களுக்கு முன்னையவிட அதிக சுதந்திரங்கள் லபித்திருப் பதால், தீண்டாமையை நீக்குவதற்கு ஒரு தீர்மானம் கொண்டுவரப் படவும் நிறைவேற்றப் படவும் மிருந்த வசதியுண்டு. துரைத்தனத் தார் தடை கூறவும் மாட்டார்கள்; தடை கூறவும் முடியாது. அவ்வாறு ஸ்ரீமாந் ராயர்கட்சியைச் சேர்ந்த சட்ட சபை அங்கத்தி னர் ஏன் செய்யவில்லை? அவ்வாறு செய்யாததினால் ராயர் கட்சியா ருக்கு ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்தில் அக்கரையில்லை யென்று துணிவது மிகையாமோ?

***

துரைத்தனத்தரர் தாமாகத் தீண்டாமையை ஒழிப்பதற்கு ஒரு சட்டம் ஏற்படுத்தினால் சமுதாய விஷயத்தில் அந்நிய அரசாங்கத் தார் தலையிடுவது அநியாய மென்றும், சமுதாயமும் சமயமும் இந்தியாவிலே பரஸ்பர தொந்த முடைய தென்றும் சமய விஷயங் களில் துரைத்தனத்தார் பிரவேசிப்பது விக்டோரியா மஹாராணி யாரின் வாக்குறுதிக்கு எதிரிடையான தென்றும் ஸ்ரீமாந் ராயரவர் களின் கட்சியார்தான் முதன் முதல் கூக்குரலிடுவார்கள். அற நிலை யப் பாதுகாப்பு மசோதா நிறை வேற்றப் பட்டு விட்டதனாலே தென்னிந்தியாவிலே சமயமே அடியற்று வீழ்ந்து விட்ட தென்று ராயரவர்களின் இனத்தார் எழுப்பிய கூக்குரல் இன்னும் ஓய்ந்த பாடில்லையே. இதை யெல்லாம் மறந்து, தீண்டாமையை ஒழிப்ப தற்கு துரைத்தனத்தார் சட்டம் ஏற்படுத்தாமைக்கு அவர்களைக் குறை கூறுவது எமக்கு நகைப்பையே தருகின்றது.

***

தீண்டாமை யொழித்தற் கிளர்ச்சியை காந்தியடிகள் தொடங்கு மட்டும் துரைத்தனத்தார் ஏன் சும்மாயிருந்தன ரென் கின்றார் ஸ்ரீமாந் ராயர். துரைத்தனத்தார் அன்றும் இன்றும் ஆதி

திராவிடர் விஷயத்தில் ஒருப் போலவே இருந்து வருகின்றார்கள். தீண்டாமையை ஒழிக்கும் விஷயமாக முதன்முதல் கிளர்ச்சி செய்யத்தொடங்கியது காந்தியடிகள் என்பது உண்மையே. காந்தியடிகள் கிளர்ச்சி தொடங்கு வதற்கு சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னமே காங்கிரசும் இருந்து வருகின்றது. ஸ்ரீமாங் சுப்பராயரும் இருந்து வருகின்றார். ஆதி திராவிடர் விஷயமாக காங்கிரஸார் என்ன செய்தார்கள்? ஸ்ரீமாங் ராயர் என்ன செய்தார்? ஸ்ரீமாங் ராயர் எத்தனை ஆதி திராவிட மகா நாட்டுக்கு இதற்கு முன் தலைமை வகித்தார்? இப்பொழுதேனும் ஸ்ரீமாங் ராயர் தீண்டாமையை ஒழித்து விட்டதாகப் பிரத்தியட்சப் பிரமாணத்தால் காட்டியுள்ளாரா? காந்தியடிகளைப் போல் ஸ்ரீமாங் ராயர் ஆதி திராவிடப் பெண்ணை ஸ்வீகாரம் செய்து தமது குடும்பத்தில் சேர்த்துப் பாதுகாத்து வருகிறாரா? அல்லது ஸ்ரீமாங் டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்களைப் போல் ஸ்ரீமாங் ராயர் ஆதி திராவிடனைத் தமது சமையற்காரனாக அமர்த்தி யிருக்கிறாரா? இக்கேள்விகளுக்கு ஸ்ரீமாங் ராயர் பதிலளிக்க வேண்டும்.

***

காந்தியடிகள் பெயரை அடிக்கடி கூறுவதினால் தாமும் காந்தியடிகளாய் விடுவதாக அநேகர் மனப்பால் குடிக்கின்றனர். "தீண்டாமையை ஒழிக்க வேண்டும், தீண்டாமையை ஒழிக்க வேண்டும்" என்று சொல்லாத காங்கிரஸ் காரர்கள். தென்னிந்தியாவில் இல்லவே இல்லை. "ஏன் ஒழிக்க வேண்டும்" என்றால் காந்தியடிகள் அவ்வாறு கூறுகின்றார் என்பார்கள். ஆனால் காந்தியடிகள் கூறுகிறபடியே நடக்கின்றார் என்பதை இவர்கள் நினைப்பதே இல்லை.

***

காந்தியடிகள் இந்தியாவிலே ஒப்புயர்வற்ற தனி மணி. அவர் வெறும் பேச்சுக்காரர் மட்டு மல்ல. அவரது சொல்லும் செயலும் சிந்தனையும் ஒரே தன்மையன. செய்ய முடியாததைச் சொல்லார். தீண்டாமையை ஒழிக்கக் கிளர்ச்சி தொடங்கு முன் தாமே தீண்டாமையை ஒழித்துக் கொண்டார்.

***

தென்னிந்திய காங்கிரஸ் புலிகளின் நிலைமை என்ன? பிரசங்க மேடைகளிலும் கடற்கரையிலும் சடைச் சந்திகளிலும் தீண்டாமையைக் கண்டித்து அண்டங்கள் செவிடுபட பிரசங்க இடி இடிப்பார். பொதுக் கூட்டங்களில் ஆதி திராவிடர்களைத் தம் பக்கத்தும் வைத்துக் கொள்வர். தம் வீட்டிலோ வீதியிலோ ஆதி திராவிடர் சென்று விட்டால் அப்பொழுது அவர்கள் நிலைமை முற்றிலும் மாறிவிடும். திருவல்லிக்கேணி கடற்கரையில் தீண்டாமையை ஒழிக்க அடிக்கடி பிரசங்கங்கள் நடை பெறுகின்றன. இவ்வாறு ஆயிரம் பிரசங்கள் செய்வதிலும், பிரசங்கிகளாவது தலைவர்களாவது ஆதி திராவிடர்

களைத் தமது பரிசாரர்களாக அமர்த்திக் கொள்வ தன்றோ நலம்? சொல்லிலும் செயலிலும் சிந்தனையிலும் காந்தியடிகளைப் பின்பற்ற மனவுறுதி யில்லாதவர்களுக்குக் காந்தியடிகளின் பெயரை உச்சரிக்க என்ன உரிமை? காந்தியடிகளின் பெயரைச் சொல்லி பொதுஜன மதிப்பைக் கவர்ந்து தேசாபிமானிக் கூத்தாடுகிற தென்னாட்டுக் காங்கிரஸ் வீரர்களை மனச்சாட்சி கண்ணில் மண்ணிட்ட வஞ்சகர்கள் என்று கூறுவதே சாலப் பொருந்தும். இந்தப் போலி தேசாபிமானிகளின் வார்த்தையை நம்பி பாமர ஜனங்களும் மோசம் போகின்றனர்.

***

வைக்கம் சத்தியாக்ரஹத்தைத் தடுப்பதற்கு எதிர்ப்பிரசாரம் பலமாக நடந்துவருவதாகத் தெரிகிறது. பழமை விடும்பிகள் 800 பேர் வரைச் சேர்ந்து திருவிதாங்கூர் மன்னர் பெருமானிடம், சத்தியாக்ர விரதத்தை எவ்விதமாயினும் நிறுத்த ஏற்பாடு செய்யும்படி மனுச் செய்திருக்கிறார்கள். இதுவரையிலும் சத்தியாக்ரஹிகளிடம் இணக்கமாகவும் மரியாதையாகவும் நடந்துவந்த போலீசார் இப்பொழுது பலாத்கார முறைகளைக் கையாளத் தொடங்கியிருப்பது விசனிக்கத்தக்கதே. சத்தியாக்ரஹ விஷயமாக துரைத்தனத்தாரின் மனப்பான்மை மாறுபட்டிருப்பதே போலீசாரின் இம்மாற்றத்துக்குக் காரணமாயிருக்கலாமென்று ஒரு நிருபர் இந்துப் பத்திரிகைக்கு எழுதுகிறார். கலங்கிய நீரே தெளியுமாகையால் சத்தியாக்ரஹப்போர் வெகு சீக்கிரத்தில் வெற்றியடையவுங் கூடும்.

***

ஜூன் 25உ வெளிவந்த சுதேசமித்திரன் பத்திரிகையில் டெல்ஹி சட்டசபை மெம்பரான ஸ்ரீமாந் எம். கே. ஆச்சாரியா 'ஒரு பஹிரங்கக் கடிதம்' என்னும் தலைப் பெயரால் மகாத்மாவுக்கு ஒரு ராமபாணம் விடுத்திருக்கின்றார். 27உ நடைபெற விருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கம்மிட்டியில் மகாத்மாவின் கட்சியார் ஜெயம்பெற்று விடுவரோ என்ற அச்சம் அக்கடிதம் முழுதும் தொனியாநின்றது. மகாத்மா இதுபோன்ற ராமபாணங்களுக்கு அஞ்சுபவரல்ல. விடிந்தால் தெரியும் வெளிச்சம்.

***

'நங்கையின் நிருபம்' என்ற விஷயத்தின் ஆசிரியரான ஸ்ரீமாந் தி. ரா. ஸ்ரீநிவாஸன் அவர்கள் நமது முன்னோர் முறைப்படி ஒரு பெண் புருஷனிடத்து நடந்துகொள்ள வேண்டிய முறைகளை யெல்லாம் செவ்வனே விளக்கி எழுதியுள்ளார். இது போலவே ஒரு புருஷன் பெண்ணினிடத்து நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் ஸ்ரீமாந் ஸ்ரீநிவாஸன் ஒரு நிருபம் மூலமாக விளக்கிக்காட்ட வேண்டுமென்று விரும்புகின்றோம். என்றால் மட்டிலுமே ஸ்ரீமாந் ஸ்ரீநிவாஸனின் நோக்கம் பூர்த்திபெறும்.

சந்தா நேயர்களுக்கு

ஒரு விண்ணப்பம்.

'லக்ஷ்மி' பத்திராதிபர் ஸ்ரீமாந் கே. எஸ். முத்தைய பிள்ளை யவர்களின் புத்திரரது விவாகத்தை முன்னிட்டு 'லக்ஷ்மி' காரியாலய நிருவாகஸ்தர்க ளெல்லாம் திருநெல்வேலிக்குச் சென்றிருந்ததனுல் இம்மாதப் பத்திரிகை வெளிவரச சிறிது தாமத மாயிற்று. அடுத்த மாதப்பத்திரிகையோடு 'லக்ஷ்மி' யின் இரண்டாவது வயது ஆரம்ப மாகின்றது. இரண்டாவது வருஷம் முதல் பத்திரிகையை பத்து பாரம் (80-பக்கம்) ஆக்கி சந்தாவையும் 3. ரூபாவாக உயர்த்த வேண்டு மென்று அநேகர் நமக்கு எழுதி யிருக்கின்றனர். சந்தாத் தொகையைக் கூட்டுவது எல்லோருக்கும் விருப்பமாயிருக்கு மென்று தோன்றவில்லை. சந்தாத் தொகையை உயர்த்தாமலே 8-பக்கம் கூட்ட நாம் சித்தமாயிருக்கிறேம். இதற்குப் பதிலாக நாம் சந்தா நேயர்களிடமிருந்து எதிர்பார்ப்பது ஒரு சிறு உதவியே. அதாவது ஒவ்வொரு சந்தா நேயரும் சிறிது முயற்சி யெடுத்து இரண்டு நண்பர்களை லக்ஷ்மிக்குச் சந்தாதா ராகும்படி சிபார்சு செய்வதே. இது யாவருக்கும் இயலக் கூடிய காரியம். மனந்தான் வேண்டும். நமது சந்தா நேயர்க ளெல்லாம் நமது விருப்பத்தைப் பூர்த்தி செய்வார்களாயின் இரண்டாவது வருஷ முதல் 8-பக்கம் கூட்டுவோ மென்பது திண்ணம்.

முதல் வருஷத்திலேயே நாம் எதிர் பார்த்ததிலும் அதிகமாக தமிழகத்தாரின் உதவியைப் பெற்றுக் கொண்டதற்கு நாம் மிக வும் நன்றி பாராட்டு கின்றேம். தென்னுட்டில் மட்டுமன்றி இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலாய் நாடு, நெட்டால், போர்னியோ, சுமாத்ரா, ஜாவா, சைனு முதலிய இடங்களிலுள்ள தமிழர்களும் நமது லக்ஷ்மியை ஆதரித்து வருகின்றனர். இரண்டாவது வருஷத் திலும் இவ்வாதரவு குறைவுபடா தென்று நம்புகின்றேம்.

இரண்டாவது வருஷச் சந்தாவை 12-வது இலக்கப் பத் திரிகை வெளிவருமுன் மணியார்டர் மூலம் அனுப்பும்படி நமது சந்தா நேயர்களை வேண்டுகின்றேம். அவ்வாறு அனுப்பாதவர் களுக் கெல்லாம். 12-வது இலக்கப் பத்திரிகை வி. பி. யாக அனுப் பப்படும். இரண்டாவது வருஷத்தில் சந்தாதாரரா யிருக்கப் பிரிய மில்லாதவர்கள் முன்னுடியே நமக்கு விவரம் தெவிரிக்க வேண்டும்

மானேஜர் :

'லக்ஷ்மி'

சென்னை.

விசேஷக் குறிப்புகள்

(பல பத்திரிகைகளிலிருந்து)

சில மாதங்களுக்குமுன் ஒரு மனிதனுக்குக் கொம்புகள் முளைத்திருந்தனவென்றும், அக்கொம்புகள் விழுந்து மறுபடியும் முளைக்கின்றனவென்றும் பத்திரிகைகளில் வாசித்து வந்தோம்.

இப்பொழுது பம்பாய்க்குப் பக்கத்தில் போரிபந்தர் என்றவிடத்தில் இரண்டு கொம்புகளுள்ள ஒரு பெண் பிள்ளை பிறந்திருக்கின்றது. இது கலியின் கூத்தல்லவா?

சென்ற பிப்பிரவரிமீ 3உ முதல் மார்ச்சுமீ 22உ முடிய சென்னை மாகாணத்திலுள்ள நூல் மில்களிலும், பருத்தி மூட்டை கட்டும் பிரஸ்களிலும் இருப்பது 400 பவுண்டு கொண்ட 27,303 பேல்களாகும். இதில் 14,736 பேல்கள் இம்மாகாணப் பஞ்சாலைகள் உபயோகத்திற்கும் 6,893 பேல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யவும், 2,472 பேல்கள் பம்பாய்க்கு அனுப்பவும் சேகரிக்கப்பட்டது.

கல்கத்தாவில் ஹூக்ளி நதிக்குப் புதிதாகக்கட்ட உத்தேசித்திருக்கும் பாலத்திற்கு 63 கோடி ரூபா செலவாகுமென்று திட்டம் போடப்பட்டிருக்கிறதாம்.

க்ஷயரோகத்தைச் சத்திர வைத்திய மூலமாக நிவர்த்திக்கும் ஓர் நூதனமான கருவி சற்போது கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றது. இது சென்செபஸ்தியனிலுள்ள கிங் எட்வர்ட் க்ஷயரோக வைத்தியசாலையிலே நவீனமாகப் பெரும் அனுகூலத்தை விளைத்திருப்பதாகத் தெரிய வருகின்றது. செயற்கையான சூர்ய வெளிச்சம் அமைக்கப்பட்ட ஓர் நூதனக் கருவியாக இருக்கின்றது. இது இப்போது அமெரிக்கா ஐரோப்பா முதலிய தேசங்களிலே மிகவும் அபிவிருத்தியாகி வருகின்றது.

இந்தியாவின் ஜனத்தொகையில் நூற்றுக்கு ஒன்றரை பேரே அரசாங்க ஊழியராயிருக்கின்றனர் என்று 1921-ம் வருஷத்து ஜனக் கணித அறிக்கையினால் தெரிகிறது. தேசப் பாதுகாப்பிலும் நிருவாகத்தை நடத்துவதிலும் மொத்தம் 48,26,479 பேரே இருக்கின்றனர் என்று மேற்படி அறிக்கை கூறுகிறது. இதனால் இந்தியா விவசாயதேசம் என்பது நன்கு புலனாகவில்லையா?

கத்தியாவார் மாகாணத்தில் புதிய மகாத்மா ஒருவர் தோன்றியிருக்கிறாராம். காவாஸ்தேசாய் என்பது அவர் பெயர். அவரிடமுள்ள ஒரு பசு கன்று ஈனாமலே பால் கறப்பதால் அவரிடம் தெய்வீக சக்தி யிருக்கிறதென்று ஜனங்கள் அவரைப் போற்றுகிறார்களாம். ஆனால் கால்நடை சாஸ்திர வல்லுநர் இவ்வாறு கன்றில்லாமல் மாடு பால் கறப்பது பல விடங்களில் நேர்ந்திருக்கிறதென்று கூறுகிறார்கள்.

பம்பாயில் பூமிக்குள் ரயில் போடப் போகிறார்கள்.

விசேஷக் குறிப்புகள்

இத்தலி நாட்டிலுள்ள வெசூவியஸ் என்ற எரிமலை பொங்கத் தொடங்கி யிருக்கிறது.

தமிழ் நாட்டில் சுமார் பதின் மூன்று லட்சம் நாடார்கள் இருக்கிறார்கள்; மலையாளத்தில் சுமார் பதினெட்டு லட்சம் ஈழுவர்கள் இருக்கிறார்கள். நாடாரும் ஈழுவர்களும் ஒரே மூல ஜாதியின் இருபிரிவென்று சொல்லுகிறார்கள்.

போத்தனூர் இருப்புப்பாதைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஜில்லாகலெக்டரின் சமரச முயற்சியால் முடிவடைந்து விட்டது; வேலை நிறுத்தஞ் செய்திருந்த நாட்கள் ரஜா நாட்களாகக் கருதப்படும்.

கராச்சி ராலி கம்பெனியில் உத்தியோகஞ் செய்து பென்ஷன் பெற்று வாழ்ந்த போலோ என்ற 67 வயது சென்ற கிரேக்கர் தமக்கு வயதாய் விட்டதென்று தற்கொலை செய்து கொண்டார்; தமது ஆஸ்தி 5 லட்சத்தையும் பல தர்மங்களுக்கு எழுதி வைத்து விட்டார்.

நீண்ட தலைமயிர், தலையில் வட்டமான ஒரு சீப்பு, கையில் ஒரு இரும்புக் காப்பு, இடுப்பில் மூன்றடி நீளமுள்ள ஒரு கத்தி, முழங்கால்வரை அணியக்கூடிய ஓர் அங்கி, இவை அகாலியரின் ஐந்தடையாளங்களாம்.

நாகர் கோயிலில் சத்திய நேச நாடார் என்பவர் ஒரு தீப்பெட்டித்தொழிற் சாலை ஏற்படுத்தியிருக்கிறாராம். அதில் வாழைப்பட்டையால் பெட்டியும், தென்னைமட்டையால் குச்சியும் செய்கிறார்களாம்.

அகாலி ஜாதாவுக்கு ஆதரவளித்தாரென்று பஞ்சாப் சட்டசபை அங்கத்தினரான சர்தார் மகேந்திர சிங்குக்கு இரண்டரை வருஷம் கடுங்காவலும் 1,500 ரூபாய் அபாரதமும் விதித்திருக்கிறார்கள்.

நீலகிரி குன்னூரிலுள்ள நாராயண குருகுலத்தின் வருஷத் திருநாள் சில தினங்களுக்கு முன் நடந்தது; அப்பொழுது தலைமை வகித்த மந்திரி பத்ரோ மகாத்மா காந்தியின் தியாகத்தைப் புகழ்ந்து பேசினார்.

உயரமான குதியுள்ள பாதரக்ஷைகளை அணிதல் உடம்புக்குக் கேடென்று மிஸ்டர் ஜெப்ரீ என்ற வைத்திய நிபுணர் கூறுகிறார். அழகுக்காகச் செய்யப்படும் உயரமான குதியானது காலைக் கெடுப்பதோடு முதுகெலும்பு, நரம்புகளையும் கெடுத்து வியாதிக்குள்ளாக்குகிறதென்று அவர் சொல்லுகிறார்.

ஜெகத் பிரசித்திபெற்ற ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலக்கவியின் பிறப்பிடமான ஆவன் நதி தீரத்திலுள்ள ஸ்டராட் போர்டு என்னும் ஊரைச் சென்ற வருஷத்தில் 72,810–பேர் போய்ப் பார்த்து அந்த

மகாகவிக்கு வணக்கம் செலுத்தி வந்தார்களாம். நமது கவிச் சக்ர வர்த்தியான கம்பன் பிறந்த ஊர் சோழநாட்டிலுள்ள திருவழுந்தூர் என்னும் விஷயமே அநேகருக்குத் தெரியாது.

இத்தலி தேசத்தில் மரண தண்டனை கிடையாது.

மாஜி கெயிசரின் இரண்டாவது மனைவி மிகவும் சுகவீனமா யிருக்கிறாராம்.

தென்மார்க்கு நாட்டு விவசாயிகள் கல்வியறிவுள்ளவர்கள். அதனால் அங்கே விவசாயம் மிகவும் சீராக நடைபெறுகிறது.

சென்ற சில வருஷங்களாக இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும், முஸ்லிம் பாதிரியாகப் பிரசார வேலை செய்து வந்த டாக்டர் முகமது சாதிக் என்பவர் அமெரிக்காவில் புதிதாக இஸ்லாமானவர்கள் செய்த உதவியால் 23,000 ரூபா வசூல் செய்து அங்கே இரண்டு மசூதிகள் கட்டி யிருக்கிறாராம்.

கலியாணச் சந்தை.

பிரான்சு தேசத்தில் விவாகங்கள் மிகக்குறைவடைந்திருக்கிற தாகத் தெரிகிறது. இந்தக் குறையை நிவர்த்திக்க ஒரு இச்சா சேவகர் சபை ஏற்படுத்தப்பட் டிருக்கிறது; இச்சபை தனது பிர சார வேலையைச் செய்ய "கலியாணச்சந்தை" ஒன்றைக் கூட்டி யிருக்கிறது. கலியாணஞ் செய்யவேண்டுமென அபேட்சிக்கிறவர் கள் தங்களது மனப் பான்மைக் கொத்த வதூவரர்களைத் தெரிந் தெடுக்க வேண்டி அங்கு விஜயம் செய்வராம்; வாலிபர்களும் இளம் பெண்களுமாக 328 பேர் இச்சந்தைக்குச் சென்று, தேத்தண்ணீர், கச்சேரி, நடனக் கச்சேரி முதலிய முதல் அம்சங்களோடு இச்சங்கீத நடவடிக்கைகளை ஆரம்பிப்பனராம். விவாக மனுதார்கள் தங்க ளிடம் கொடுக்கப்படும் ஒரு பத்திரத்தில் தங்கள் மனப்பான்மையை யும், விருப்பத்தையும், லௌகீக அந்தஸ்தையும், எழுதிவைப்பார்க ளாம். அதின் அறிகுறியாக ஒவ்வொரு இலக்கமுள்ள ஒவ்வொரு வில்லை கொடுக்கப்படுமாம். அதை அவர்கள் அணிந்துகொண்டு உல்லாச சல்லாபங்களில் கலக்கும்போது தங்களுக்குப் பிரியமான ஜோடியைத் தெரிந்துகொண்டு, அவர்கள் வில்லையைக் கொண்டு ஷை பத்திரமூலமாக அவர்களின் நிலைமையை அறிந்து பிரிய மிருப்பின் மணந்து கொள்வார்களாம்.

மனுதார்களின் மனப்பான்மைப் பத்திரத்தில் அநேக வாலிபர் கள், வீட்டை விரும்பும் பெண்ணையே தாங்களும் விரும்புவதாகவும், அநேக பெண்கள் நிச்சயமானதும் உயர்ந்ததுமான உத்தியோக வரும்படியுள்ள ஆடவர்களையே விரும்புவதாகவும் எழுதிவைத்திருக் கின்றனராம். இன்னும் சில ஸ்திரீகள், பயஸ்கோப்பிலும், சங்கீதக் கச்சேரியிலுமே தாம் நாட்டமுற்றிருக்கின்றன ரென்றும் வெளிப் படுத்தி யிருக்கின்றனராம். இச்சந்தையின் பலனாக அநேக விவாகங் கள் நடைபெறலாம்.

விசேஷக் குறிப்புகள்

அறுபது வயது சென்ற தானியேல் கென்னடி என்ற ஒற்றைக் கண் மாப்பிள்ளை பெண் வேண்டுமென்று விளம்பரம் செய்திருந்தார்; அவருக்கு முன்னூறு விண்ணப்பங்கள் வந்தனவாம். 55 லிருந்து 60-வயது வரையுள்ள பெண்களிட மிருந்து அதிகக் கடிதங்கள் வந்திருக்கின்றன. 79 வயதுள்ள ஒரு பெண் எனக்குத் தனியாயிருப்பது ஒரு மாதிரியாயிருக்கிறது என்று எழுதியிருக்கிருள். 19-வயதுள்ள ஒருத்தி எனக்கு வாலிபர்கள் மீது பிரியமில்லை கிழவர்களுக்கு மனைவியாவதில் எனக்குப் பிரியம் என்று எழுதியிருக்கிருள். ஒரு பெண் தான் நாலடி எட்டங்குலம் உயரமென்றும், தனது உடம்பின் சுற்றளவு 42 அங்குல மென்றும் எழிதியிருக்கிருள்.

டிராம் வண்டியோட்டி பிரதம மந்திரியானுர்.

தென் ஆஸ்திரேலியாவின் பிரதம மந்திரி கனம் ஜான்கான் என்பவர் சொற்ப கல்வி கற்று முதல் முதல் ஒரு கசாப்புக்காரன் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவரது 23-வது வயதில் அடெலெய்ட் என்ற இடத்திற்கு வந்து டிராம் வண்டி யோட்டும் வேலையில் அமர்ந்தார். 1910-ல் டிராம் வண்டி யோட்டிகளையெல்லாம் வேலை நிறுத்தஞ் செய்யும் படி செய்து அவர்களுக்குள் தலைவராய் விளங்கினுர். இப்போது அவர் தென் ஆஸ்திரேலியாவின் முதன் மந்திரியா யிருக்கின்ருர்.

அசையும் மலை.

கிராண்டா பிரதேசத்தில் மோனசிஸ் என்னும் ஊருக்கருகிலுள்ள சிரா நிவாடா என்ற மலை தொடர்ந்து மழை பெய்ததின் பயனுய் சுமார் 2 மைல் தூரம் நகர்ந்து விட்டது. அது மோசிசிலி என்னும் ஊரைச் சமீபித்து வந்துகொண்டிருக்கின்றது. இதனுல் முன்பு மலைக்குப்புறம்பாயிருந்த அநேக தோட்டங்கள் இப்போது அம்மலையால் மூடப்பட்டு விட்டன. இம்மலை இன்னுங் கொஞ்சம் நகர்ந்தால் அது அவ்வூரிலுள்ள நதியையும் மூடி ஊரையே இல்லாமல் ஆக்கிவிடும். ஜனங்கள் இப்போது அவ்வூரைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்ருர்கள்.

ஹரித் துவாரத்திலுள்ள குரு குலத்தில் இப்பொழுது பத்தொன்பது பஞ்சமர்கள் படிக்கிருர்கள். அவர்களில் ராமசந்திரன் என்பவன் இவ்வருஷம் முதல் வகுப்புப் பரீட்சையில் தேறியிருக்கிருன். அவன் பல இடங்களுக்குச் சென்று பிரசங்கஞ் செய்வான். வேதங்களுக்குப் பொருள் கூறும் வல்லமையும் அவனுக்குண்டு என்று சுவாமி சிரத்தானந்தர் கூறுகிருர்.

ஒரே நேரத்தில் 3 கல்யாணம்.

மான்சஸ்டரிலுள்ள கோயில் ஒன்றில் விதவையான தாய்க்கும், அவள் மகனுக்கும், மகளுக்கும் ஒரே சமயத்தில் கல்யாணம் நடைபெற்றதாம்.

துளசியின் மஹிமை.

'துளசிச் செடி குளிர் ஜுரத்தை நாடவொட்டா'தென இங்கிலீஷ் டாக்டர்கள் சொல்லுகிறார்கள். முற்காலத்தில் வீட்டு முற்றத்தில் துளசிச் செடி வைத்திருந்தது போக இக்காலத்தில் வீட்டின் வாசலில் குரோட்டன்ஸ் வைக்கப்படுகின்றன.

வேப்ப மரத்தின் அருமை.

இந்தியாவில் வேப்பமரம் ஏராளமாக உள்ள கிராமங்களில் சுரம் என்பதே கிடையாது என டாக்டர் வாட்ஸ என்பவர் 34 வருஷங்களுக்கு முன் எழுதியிருக்கிறார். இக்காலத்தில் வேப்ப மரத்தைக் காண்பதே மகா துர்லபமா யிருக்கின்றது.

அரிசி.

அரிசியில் தவிட்டில் தான் 'பாஸ்பரஸ' முதலிய தேகாரோக்கியத்திற்குரிய பொருள்கள் இருக்கின்றன. மிஷினில் தீட்டுவதால் அவைகளின் பெரும்பாகம் போய்விடுகின்றன. அவைகளைப் புசிப்பதால் கொடிய வியாதிகளுக்கு ஆளாக வேண்டுமென மேனாட்டு வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். நமது நாட்டில் நெல்மிஷின்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவில் பணக்காரப் பெண்கள்.

அமெரிக்கா தேசத்தில் பெண்கள் ஆடவரைப் பார்க்கிலும் பணம் சம்பாதிப்பதில் திறமைசாலிகளாக விளங்குகின்றனர். மிஸஸ் ரீசெட் என்னும் ஓர் பால்ய விதவை மூலதனமாக பதினைந்து ரூபாயை வைத்துக்கொண்டு, ஓர் காரியத்தில் பிரவேசித்தாள். ஆறுமாத காலத்திற்குள் 6 லட்சம் ரூபாய் சம்பாத்யம் செய்ததுடன், பல சுரங்கங்களுக்கும் முதலாளியானாள்.

மிஸஸ். ரிச்சார்ட் என்னும் மாது சில வருடங்களுக்குள் தமது சொந்த முயற்சியினால் பெருத்த நிலங்களை வாங்கக் கூடியவரானார். அவருக்கு ச்சொந்தமான நிலத்தின் மத்தியில், இவருடைய வீடு இருந்தது. இவ் வீட்டிற்கும் இவ்வம்மையாரின் நிலத்துக்கும் 13 மைல் தூரமிருக்கின்றது. இவரிடமுள்ள ஆடுமாடுகள் மாதிரி வேறு எவரிடமும் கிடையாதாம். தன்னிடம் வேலை செய்வோர் யாவருக்கும் இவர் கொடுக்கும் மாதச்சம்பளம் ரூ. 25,000 மாகும்.

ஒரு பத்திரிகை காரியாலயத்தில் விலாசம் எழுதுவதற்காக வென்று ஒரு அமெரிக்கப் பெண் குமஸ்தாவாக நியமிக்கப்பட்டிருந்தாள். இவரது பெயர் மிஸஸ். ரீடர், என்பது. இவர் இப்படியிருக்கும் போதே, தான் வெகுவாக முயற்சி எடுத்துக் கொண்டனர் இதன் பயனாக, நியூயார்க் பட்டணத்தில் பத்திரிகைகளுக்குச் சங்கதிகள் அறிவிக்கும் கம்பெனிகளில், உயர்ந்த கம்பெனியை வாங்கி

தானே அதன் முதலாளியாகயிருந்து, அதனை நடத்தலானார், அவ் வமயம் இவருக்கும், மிஸ்டர் பூர்பாண்ட்பர், என்பவருக்கும் ஒரு போட்டி ஏற்பட்டது. ரயில்வே சம்பந்தமாக ஏற்பட்ட இப் போட்டியில், மிஸஸ் ரீடர் 3 கோடி ரூபாய் செலவு செய்து தன் காரியத்தை முன்னுக்குக் கொண்டு வந்தனர். லண்டன் மாநகரில், பூமிக்குள் செல்லும் ரெயில்கள் விஷயமாக ஒரு நூதனமான ஏற் பாடு செய்யப் பட்டதற்கு இவரே காரணமாகும். இவ்வேற்பாட்டை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்காக, பார்லிமெண்ட் உயர்தர, அங்கத்தினர்களைக் கண்டு பேசி தம் எண்ணத்தின் பிரகா ரம் காரியம் நிறைவேறும்படி செய்தனர். அரசாங்க வரவு செலவு விவகாரங்கள் விஷயமாக, அவர் அரசாங்கத்தாருடன் அதிக மும்மர மாகப் போராடி ஜெயம் பெற்றனர். பெருவில் செம்பு வியாபார விஷயத்தில் போட்டியாக நின்று ஜெயம் பெற்றனர். இவரது திறமையையும், கீர்த்தியையும், கண்ட வியாபார ஆடவர் வெட்கினர்

காலி போர்னியாவில் மிஸஸ். எர்மான் என்னும் ஒரு மாது வசித்து வந்தார். அவருக்கு 75-லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள ஆஸ்திகளிருந்தன. அவைகளை விற்று நியூயார்க்கில் வந்து வியாபா ரம் செய்ய ஆரம்பித்தார். இரண்டு வருட காலத்திற்குள் 6 கோடி ரூபாய்க்கு முதலாளியானார். இவ்விதமே, அமெரிக்காவில் மாதர் செய்யும் காரியம் மெச்சத் தக்கதா யிருக்கின்றது.

குதிரையேறி நாடு சுற்றிய குமரி

அமெரிக்கா ஐயோன் நகரிலுள்ள மிஸ் ரஹலன் என்னும் மாது தான் குதிரையில் சவாரி செய்துக்கொண்டு அமெரிக்கா தேச முழு வதையும் சுற்றி முடித்துவிட்டாளாம். அதற்கு ஆறரை வருஷங் கள் பிடித்தன. அவள் ஒருவளே தனித்துச் சென்றதாயும் தன் செலவுக்காகப் போன இடங்களில் வேலை செய்து சம்பாதித்ததாயும், சிற்சில நகரங்களில் 3 மாதங்களுக்குமேல் தங்கியதாயும் தன்னுடன் தன் குதிரையில் கூடார வசதிக்காகச் சாமான்களைக் கொண்டு போனதாயும் தெரிகிறது.

க்ஷய ரோகம்.

இந்தியாவில் செங்கல் காரை வீடுகளே எல்லோரும் கட்டு கிறார்கள். மண் வீடுகளைப் பார்ப்பதுகூடத் துர்லபமாய்விட்டது. இதுவே க்ஷயரோகம் முன்னிலும் அதிகமாய் இருப்பதற்குக் காரண மாம். சுண்ணாம்பு வீடுகளில் வெள்ளை அடிக்கடி அடிப்பதில்லை. தரைக்கு எங்கும் பாயைப் பரப்புகின்றார்கள். அழுக்கும் குப்பை யும் பாயின் கீழே குவிந்து கிடக்கின்றன. இதுவே க்ஷயரோகம் முதலாய பல ரோகங்களுக்கு அடிப்படை என்பது நம் நாட்டில் மிக்க அனுபவம் பெற்ற பிரபல ஆங்கில வைத்தியர் ஒருவரின் கூற்று.

உலகத்தில் செல்வம் நிறைந்த பெண்மணி.

ஜெர்மனி தேசத்தின் தொழில்களின் அரசராக இருந்த ஸ்ரீமான் ஹர்ஸ்டின்னஸ் என்பவர் தமது மனைவிக்கு ஏராளமான செல்வத்தை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். அவரது மனைவியான ஸ்டின்னஸின் செல்வம் 1,00,00,000 பவுனிலிருந்து 1,00,000,000 பவுன் வரையில் இருக்கு மென்றும் மதிப்பிடப்படுகின்றது. பெண்மணிகளில் அவரே உலகத்தில் மிகுந்த செல்வந்தராக இருக்கின்றார். ஸ்ரீமான் ஹர்ஸ்டின்ஸ் 32 கம்பெனிகளுக்குத் தலைவராகவும், 32 கம்பெனிகளின் அத்தியட்சகராகவும் இருந்தார். அவர் பல பத்திரிகைகளையும், கப்பல்களையும், நிலக்கரிச் சுரங்கங்களையும் நடத்தி வந்தார். அவர் தமது மூத்த குமாரரான ஸ்ரீமான் ஹர் எட்வர்டுஸ டின்னஸினிடத்தில் தாம் இறப்பதற்கு முன்பு தமது தொழில்களை யெல்லாம் ஒப்புவித்திருக்கின்றார்.

பெண் கொள்ளைக்காரர்.

அமிருதபஜார் பத்திரிகையில் கீழ்க்கண்ட ஓர் செய்தி கூறப்பகிறது :—

"நியூயார்க்" (அமெரிக்கா) நகரத்தில் பெண்மக்களான கொள்ளைக்கூட்டத்தார் ஏராளமாக இருக்கின்றனர். சில சமயங்களில் இவர்கள் ஆடவர்களான கொள்ளைக் கூட்டத்தாருக்குச் சகாயம் செய்கின்றவராய் இருந்தபோதிலும் பொதுவாக இவர்களும் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்திக் கொள்ளையிடுகிறார்கள். ஒரு சிறுமி போலீசாருக்கு வசைமொழிகளுடன் கூடிய கடிதங்களை எழுதித் தன்னைப் பிடிக்குமாறு அவர்களை அழைத்தாள். நடுப்பகலில் ஒரு ஷாப்பில் துப்பாக்கி காட்டி பொக்கிஷதாரரைப் பயமுறுத்திப் பணத்தை அடித்துக்கொண்டு சென்றாள். எல்லோரும் கடையில் இருக்கும்போதே இவ்வாறு செய்து வெளியே வரும்போது கதவைச் சாத்திப் பூட்டு போட்டுக்கொண்டு ஓடிவிட்டாள். நியூயார்க் நகரஎல்லைக்குள் எட்டுச் சிறுமிகள் இவ்வாறு கொள்ளை யடிப்பதே தம்வேலையாகக் கொண்டுள்ளார்களென்று போலீஸார் தெரிவிக்கின்றனர். இவர்கள் இதுவரையில் 50 கொள்ளைகளை நடத்தியிருக்கின்றனர்.

பூமியில் யுத்தமே கூடாதென்று வற்புறுத்த ஒரு கூட்டத்தார் தோன்றி யிருக்கிறார்கள். மே மாதம் முதல் தேதியை அவர்கள் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். இந்தமாதம் முதல்தேதி லண்டனிலும், பாரிசிலும், பெர்லினிலும், வார்சாவிலும் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்காகக் கூடிக் கொண்டாடினார்கள். பாரிசில் சில்லறைக் கலகங்கள் ஏற்பட்டன. பெர்லினில் போலீசாருக்கும் தொழிலாளருக்கும் சண்டை ஏற்பட்டதில் தொழிலாளர் நால்வர் இறந்தனர். சிலர் காயமடைந்தனர். வார்சாவில் 200 பேர் கைதியாயினர். இந்தத் திருநாளை நாகப்பட்டணத்திலுள்ள தொழிலாளிகளும் கொண்டாடினார்கள்.

விசேஷக் குறிப்புகள்

விதவா விவாகம் (காந்தியடிகள் கருத்து.)

ஆதிச்ய பிராமண சமாஜத்தின் பதினேழாவது வருஷாந்தக் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் சுக்லா என்பவர் விதவா விவாகத்தைப்பற்றி மகாத்மா காந்தியின் அபிப்பிராயத்தைக் கேட்டதில் அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:—விதவைகள் புனர் விவாகம் செய்து கொள்ளக்கூடாதென்னும் ஏற்பாடு ஹிந்து சமூகத்திற்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிற தென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தாரமிழந்த ஆண்மக்கள் மீண்டும் விவாகம் செய்துகொள்ள ஆவலுள்ளவர்களா யிருக்கும் வரையில் பெண்மக்கள் விஷயத்தில் மட்டும் இந்தக் கட்டுப்பாடு அனுஷ்டிக்கப் படுவதைப் பெருஞ்சுமை யென்றே கருதவேண்டும். பாலிய விதவைகளைப் பார்க்கும்போ தெல்லாம் எனக்குக் கொடுந் துக்கம் உண்டாகிற தென்பதையும் ஒப்புக்கொள்கிறேன்; மேலும் வேறு வழியின்றிக் கட்டாயத்தின் பேரில் புனர்விவாகம் செய்து கொள்ளாமலிருப்பதில் எவ்விதச் சிறப்பு மிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை; ஆகவே இந்த நிலைமையில் எனது மனச்சாட்சி முழுதும் இடங்கொடுக்கா விடினும் பால்ய விதவைகளின் புனர் விவாகத்தை நான் ஆதரிக்கிறேன்; தங்கள் கணவர்களோடு கூடி வாழும் சந்தர்ப்பம் பெறாத பாலிய விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்ளலாமென்று ஸ்ரீமாந் சுக்லா சொல்வதை நான் மனப் பூர்வமாக ஆதரிக்கிறேன்; மணமகன்களுக்கும் மணமகளிருக்கும் வயதை நிர்ணயம் செய்துவிட வேண்டுமென்றும் நான் கருதுகிறேன்.

சிலகாலத்திற்கு முன் ஜாவாத் தீவிலிருந்து கொழும்புக்கு வந்த ஒருவர் தமது ரிக்ஷா வண்டிக் கூலிக்காக ஒருவரிடம் ஒரு சிறு தொகை கடன் வாங்கினார்; கடன் கொடுத்தவர் அந்தச் சிறு தொகையைப்பற்றி நினைக்கவேயில்லை; ஆனால் சமீபத்தில் மேற்கண்டவருக்கு ஒரு கடிதம் வந்ததில் கடன் வாங்கிய கனவான் ஜாவாவில் இறந்துபோய் விட்டாரென்றும், கொழும்பு வாசி கடன் கொடுத்ததற்கு நன்றியாகச் சுமார் நாலுலட்ச ரூபாய் எழுதி வைத்திருப்பதாகவும் தெரிய வந்தது. "நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி—என்று தருங்கொல் என வேண்டா"

ஐந்துவயதில் தாடி.

"டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் கூறுகின்றார்.—சோவியட் பத்திரிகைகள் விலாடிவோ—ஸ்டாக்கிலிருந்து மாஸ்கோவிற்கு வந்துள்ள ஒரு பையனைப்பற்றி விரித்து எழுதுகின்றன. அப்பையனுக்கு இன்னும் ஐந்தவயது கூட முற்றுப் பெறவில்லை. ஆனால் அவன் ஒரு வாலிபனின் தன்மையை யடைந்துள்ளான். அவனுக்கு தாடியும் மீசையும் வளர்ந்திருக்கின்றது. அவனுடைய நடத்தையும் செய்கையும் ஐந்து வயது குழந்தையின் செய்கையும் நடத்தையும் போன்றதாகவே யிருப்பினும் ஒரு சாதாரண மனிதனைத் தோற்கடிக்க கூடியவாறு அவனுடைய நரம்புகள் வளர்ந்திருக்கின்றன,

பிறந்த சமயத்தில் அவன் சாதாரண மாகவே குழந்தைகளைப் போன்றே யிருந்தான். ஆனால் முதல் ஆண்டிலேயே தசைகள் அதிகமாய் வளர ஆரம்பித்து விட்டன. மாமிசக்கிரந்திகள் முறை பிறண்டிருப்பது தான் இவ்வித வளர்ச்சிக்கு காரண மென்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். தாய் தந்தையர் சுகமாகவே யிருக்கின்றனர்.

பாடகர்களுக்கு தேகபலம் அவசியம்.

பொதுவாகவே பாடகர்கள் யாவருக்கும் சரீர சௌக்கியமும், தேகபலமும் மிகவும் இன்றியமையாததாகும். அதிலும் முக்கிய மாய் வாய்ப்பாடகர்களுக்கு இவை மிக மிக அவசியம். பாடகர்கள் 'கூட்டத்தவரை வசப்படுத்த அவர்களுக்கு வசீகரமான முககாந்தி யும், திடசரீரமும் இருத்தல்வேண்டும். பண்டைக் காலத்தில் பாட கர்கள் சாதாரண ஜனங்களைவிட மூன்று மடங்கு அதிகமான சரீர திடம் கொண்டவர்களா யிருந்திருக்கிறார்கள். வாத்தியங்களை வாசிப்பவர்களுக்கும் சரீரபலம் அவசியமேயாகும். பாடகர்கள் எவ் விதம் தேகசௌக்கியத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்ற முறைகளைத் பற்றி, மியூஸிகல் அமெரிக்கா, என்ற பத்திரிகை வியக்த மாக எழுதியிருக்கிறது. அதில் காணப்பட்டுள்ள குறிப்புகள் கீழ்க் கண்டவாறாகும் :—

1. சுருட்டு, சிகரெட், பீடி முதலியவைகள் தொண்டையைக் கெடுத்து விடுமாகையால் அவைகளை உபயோகித்தல் கூடாது.

2. மதுபான மருந்தலை ஒழிக்க வேண்டும்.

3. பாட்டுக் சேரிகளுக்குக் கிராக்கியுள்ள காலகங்கள் இரவில் வெகு நேரம் கண்விழித்துக் கொண்டு கச்சேரிகளில் நடத்தக் கூடாது.

4. அதிகாலையில் எழுந்து சங்கீத சாகித்யம் செய்ய வேண்டும்.

5. தினசரி நல்ல காற்று வாங்க வேண்டும்.

6. ரத்த ஓட்டம் நன்கு பரவ தினப்படிக்கு சிறிது தூரம் உலாவிவர வேண்டும்.

7. பாட்டுக் கச்சேரி நடைபெற விருக்கும் தினத்தில் உரக்கப் பேசுவதும், அதிகம் சிரிப்பதும் கூடாது.

8. அன்று தினம் நன்கு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.

9. மனதின் நிம்மதியைக் கெடுக்கக்கூடிய விஷயங்களில் அன்று தலையிடக்கூடாது.

10. கவலையின்றி ஸந்தோஷத்துடனும், குதூகலத்துடனு மிருக்கவேண்டும்.

11. கச்சேரி நடைபெறுவதற்கு 3-மணி நேரத்திற்கு முன் பாக இலகுவான, சீக்கிரம் ஜீர்ணிக்கக்கூடிய ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

12. பாலுடன் அன்று புளிப்புப் பதார்த்தங்களைச் சேர்த்து உட்கொள்ளக் கூடாது.

2-ம் பதிப்பு ! 2-ம் பதிப்பு !!

ஞானனந்தன்

அல்லது

பிரளயத்தில் கண்டெடுத்த பாலன்

(ஸ்ரீமான் ஏ. டேவிட் அவர்கள் இயற்றியது.)

இது ஒரு இனிய செந்தமிழ் நாவல். கன்னியர்களும் குமரர்களும் மனங்கூசாமல் வாசிக்கக் கூடிய கண்ணியம் பொருந்திய நாவல். அரசாங்கக் கல்வி யதிகாரிகளின் அங்கீகாரம்பெற்றது. வாசிக்குந்தோறும் சலிப்பை யுண்டுபண்ணுமல் மனதுக்கு உல்லாசத்தையும் உற்சாகத்தையும் ஊட்ட வல்லது. இதை வாசித்தவர்களுக்கே இதன் அருமை தெரியும். இவ்வரிய நாவலைப்பற்றி: "ஞானனந்தனின் தமிழ் நடையையும், வசன அலங்காரத்தையும், செவ்விய போக்கையும் கண்டு ஞானனந்தமுற்றேம்" என்று யாழ்ப்பாணத்து "சத்தியவேத பாதுகாவலன்" பத்திரிகாசிரியரே பகர்ந்துள்ளாரானுல் அதைப்பற்றி அதிகங் கூறுவது அனுவசியம். கதாநாயகன் கதாநாயகியின் உருவப்படம் முதலிய மூன்று அழகிய ஆப்டோன் படங்களுடையது. "நவசக்தி" (16-2-23) "ஞானனந்தனின் கதைப்போக்கு நன்ருயிருக்கிறது. இதைப் படிப்போருக்கு வெறுப்பு உண்டாகாதென்றே நினைக்கிறேம்." "இந்து நேசன்" (20-10-22) "இது ஓர் இனிமையான செந்தமிழ் நாவல். இதைக் கையிலெடுத்தால் முடிக்கும் வரையும் பூமியில் இட எவர்க்கும் மனமிராதென்ருல், இதில் எவ்வளவு தூரம் இன்சுவை பொருந்தியுள்ள தென்பது நன்கு விளங்கும்,"—விலை அணு 12. தபாற் கூலி வேறு.

துப்பறியும் நாவல் ! வெளியாய்விட்டது !!

சோமசுந்தரம்

அல்லது

சுகந்த விலாச இரகசியம்

(ஸ்ரீமான் ச. செல்வராஜ் ரெட்டியார், பி.ஏ., எல்.டி., அவர்கள் இயற்றியது.)

ஓர் அதியற்புத மனோகரமான துப்பறியும் நாவல். சொற்சுவை, பொருட்சுவை பொருந்தியுள்ளது. கதாநாயகன் தான் காதலித்த கன்னிகையைக் கடிமணம் செய்வதற்கு ஏற்பட்ட இடையூறு இன்னல்கள் அனைத்தையும் இனிமையுடன் சகித்து, இறுதியில் தன் காதலியைக் கைக்கொள்வது மிகு உருசிகரமாயிருக்கும். விலை ரூ. 1. தபாற் செலவு வேறு.

விலாசம் :—

செல்வம் அண்டு கம்பெனி,
480, சில்வர் தெரு, பரங்கிமலை.

ஏன் எங்களுடைய ரவுண்ட் ரேடியம்

கெடியாரங்களை உபயோகிக்கக்கூடாது.

இன்றைக்கே ஒன்று எழுதி வரவழைத்து உபயோகித்துப் பாருங்கள்.

இக்கெடியாரம் மிகவும் உறுதியான சாமான்களால் தயார் செய்யப்பட்டு புதிதாய் வந்திருக்கிறது. இதில் யாரானபோதிலும் வெகு சுலபமாக சீக்கிரத்தில் மணியை தெரிந்து கொள்ளக்கூடும். இதைக்கையில் கட்டிக் கொண்டு எப்பேர்ப்பட்ட கஷ்டமான வேலை செய்தபோதிலும் கடியாரம் கெடாது.



கையில் கட்டிக்கொள்ளும் சங்கிலியுடன் ரூ. 7 0 0

" " தோல்பட்டையுடன் ரூ. 6 8 0

புதுமாதிரி! முந்துங்கள்!!

எலெக்டிரிக் சிகார்லைட் விளக்கு.

இது எலெக்டிரிக் சக்தியினால் எரியும். நெருப்பு தேவையானால் விளக்கின் டைரெக்ஷன் படி செய்து மேல் புறத்தில் அமைத்திருக்கும் சக்கரத்தைத் திருப்பினால் திக்கென்று பளபளப்பான பிரகாசத்துடன் எரியும். பின்புறம் மூடிப் பக்கத்தில் மறையைக் கழற்றிவிட்டு பெட்ரோல் எண்ணெய் போடவேண்டியது. லைட் 1-க்கு ரூ. 1—4—0. லைட் 3-க்கு ரூ. 3—0—0. மேற்படி விளக்கு போடும் கல் டஜன் 1-க்கு ரூ. 1—8—0 தபால் செலவு வேறு.

விலாசம் :—

பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நே. **27**, மதராஸ்.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இல்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணா 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,

அருணாசல முதலி வீதி,

சவுகார்பேட்டை, மதராஸ்.

அகஸ்தியர்

பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் ஏற்படுதல், தலையில் ஏற்படும் விஷத்தினால் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் ஏற்படும் சகலவித மான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறாஸ்

வந்து விட்டது! வந்து விட்டது!!

புதிய சரக்கு புதிய கடியாரம்.

"டிக்—டாக்" வால் கிளாக்



இப்பொழுது தான் வந்தது.
மிக்க அழகுள்ளது.

காலத்திற்கு சரியான மணியை காட்டக் கூடியது.

முந்துங்கள்! முந்துங்கள்!!
முந்துங்கள்!!!

சுவரில் மாட்டக்கூடியது.

விலை 1-க்கு ரூ. 3 தான்.
தபால் செலவு வேறு.

விலாசம்:—

பீடர் வாச் கம்பெனி,
தபால் பெட்டி நெ. 27, மதராஸ்.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
வெஸ்ட் அண்டு கோ,
மவுண்ட் ரோட்,
சென்னை.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிஷ்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா ஒன்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷ்தசாலை, எழும்பூர், மதராஸ்.

தங்கரிஸ்டு வாட்ச் ! தங்கரிஸ்டு வாட்ச் !!

"போனாக்ஸ்" தினுசு.

இரண்டு வருஷத்துக்கு உத்தரவாதம்.



பட்டு வாருடன் சப்ளை செய்யப்படும்.

பத்து இஞ்சு சாவியில்லாத லிவர் ரிஸ்டு வாட்ச்,
15 நயமான சிகப்புக் கற்கள் பதித்தது.

18 காரட் தங்கம் ரூ. **100**
14 காரட் தங்கம் ரூ. **80**
} கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

J. ALAL & SONS.

House for Pesentation Articles,

L. 61, Rattan Bazaar Road. MADRAS.

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணாமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் "ஞான திருஷ்டிக் கண்ணாடி" யென்னும் உபாயக் கருவியுடன் இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,

சௌகார்பேட்டை, மதறாஸ்

ஜெர்மன் வைரக் கம்மல்.



அசல் வைரத்தையும் தோற்கடிக்கும் 7-கமலங்களுடனும் (Dimond-Extra) சவரன் பொன்னுக்குச் சமமான ஒருநாளும் கறுக்காத கனடியன் பொன்னால் மிகவும் இலக்ஷணமாயும் உறுதியாயும் செய்யப்பட்டவை. ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் பெரிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 4. ஆண் பிள்ளைகளுக்குக் கடுக்கனும், சிறு பெண்களுக்கு கம்மலாயும் உபயோகிக்கக்கூடிய சிறிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 3. தபால் கூலி வேறு.

ஆலிவர் அண்டு கம்பெனி, 22.ளது பீட், மதராஸ்.

ஜீ. பாம்பே குஷ்டாம்ருதம்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

சொற்ப மருந்தே கையிருப்பு.

இந்த குஷ்டாம்ருத சஞ்சீவியை வியாதியின் வன்மைக் கேற்றவாறு ஒரு மண்டலம் அரை மண்டலம் அல்லது 16 நாள் உட்கொண்டு வந்தால் 18 வித குஷ்டரோகங்களும் 21 விதமான மேக ரோகங்களும் மேக சம்மந்தத்தால் வரும் பவித்திரம், கிரந்திகள் ஆருத பெருத்த விரணம் குழிப்புண்கள் இரத்தக்கெடுதியால் வரும் சர்மவியாதிகளும் லிங்கப்புற்று கண்டமாலை முதலிய கொடிய ரோகங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி திரேகத்தை வயிரம் போல் செய்யுமென்பதற்கு இதற்கு குறிப்பிட்டு இருக்கும் விலையே அதில் விசேஷ குண முடைய சஞ்சீவிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு போதுமான அத்தாக்ஷி. இது ஒப்புயர்வில்லாத சஞ்சீவி. இதை கண்ணுற்றும் விட்டு விடுவது வினைப் பயனாகும், அவுஷதம் உட்கொள்ளும் விபரமும் அனுமானமும் மருந்துடன் அனுப்பப்படும்.

16 நாள் மருந்து புட்டி 1க்கு ரு. **11-4-0.**

தபால் செலவு பிரத்தியேகம்.

ஆயுர் வேத பண்டிட், **ஜீ. பாம்பே அண்டு கோ.,**

சாமிநாய்க்கன் வீதி, சிந்தாதிரிபேட்டை, சென்னை.

குறைந்த விலை! உயர்ந்த நாவல்கள்!!

"நவீனகம்"

ஒரு மாதாந்தர நாவல் சஞ்சிகை.

1923ஹு நவம்பர்மீ முதல் வெளி வந்துகொண்டு இருக்கிறது. இதில் ஒவ்வொரு இனிய நாவல் பிரதி மாதமும் தொடர்ச்சியாகவரும். இப்போது முதல் கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. அவர்களால் எழுதப்பட்ட ஜஸ்வந்தஸிங் என்னும் நாவல் வெளிவரும். இச்சஞ்சிகை கிரௌன் 48-பக்கங்கள் கொண்டது. வருஷ சந்தா (ரூ. 1—0—0) ரூபாய் ஒன்று தான். அடியில் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி சஞ்சிகையை வி. பி. யிலோ, முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பு:—முன் பணம் அனுப்பினால் ரூபாய் ஒன்றும் மணியார்டர் கமிஷன் 2 அணு வாகும்.

வி. பி. யில் ரூபா 1—4—0 ஆகும்

ஜெளி நாட்டிற்கு நுபா 1—8—0.

தி. இராஜேஸ்வரம் & பிரதர்ஸ்,

சாமிதெரு, ஆலந்தூர், பரங்கிமலை.

ஒரு வருஷப் பலன்.

பெயரையும் கடிதம் எழுதும் நேரத்தையும் சொந்தக் கையெழுத்தா லெழுதி யனுப்புவோருக்கு இன்னும் ஒருவருட காலத்திற்கு என்னென்ன நடக்கு மென்பதை சரியாக குறித்து அனுப்பப்படும். விலை ரூபா ஒன்றுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். பரிட்சித்துப் பார்த்தவர்கள் பலர் ஆச்சரியப்பட் டிருக்கிறார்கள். வி. பி. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

ராவ் நாயுடு,

சௌக்கார் பேட்டை, சென்னை.

பொய்யா? - - மெய்யா?

என்பதை ஒருமுறை கவனியுங்கள்.

தாங்கள் ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் ஒப்புயர் வில்லாத மேலான தென்றும் சிறந்த குணம், மணம் நிறைந்ததென்றும் தந்த நோய்களை நீக்குவதில் சஞ்சீவிக்கொப்பான தென்றும் நாவரட்சி முதலான எவ்வித கெட்ட குணமு மில்லாத தென்றும் மனோரம்மியத்துடன் புகழக்கூடியதாகவும் வெற்றிலை பாக்குடன் உபயோகிக்கத் தக்கதாகவு முள்ள பாலக்காடு வாசனைப் புகையிலை யென்று ஓர் அருமையான வாசனைப் புகையிலை கீழேகண்ட விலாச தாராகிய நம்மிடம் விற்கப்படுகிறது. ஷை புகையிலையை சென்னை ராஜதானி, பாம்பை, கல்கத்தா, ரங்கூன் முதலிய பலான இடங்களுக்கும் வி. பி. (V. P.) மூலம் ஏராளமாக அனுப்பப்படுகிறது. ஒரு முறை உபயோகித்துப் பார்ப்பீர்களானல் மெய்யென்று நம்புவீர்கள் என்பது உறுதி.

$\frac{1}{4}$ (கால்) பவுண்டு அடங்கிய டின் 1-க்கு விலை அணா 7, வி. பி. (V. P.) செலவு பிரத்தியேகம். வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கலாம்.

யஸ். ஆர். பிள்ளை, புரோப்ரைட்டர்,

கலியாணி பிரஸ், திருநெல்வேலி ஜங்ஷன்

சமசார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

பீஜ்புந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் துரப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா 1-க்கு ரூ. **2**. வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,

நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதுராஸ்.



"Collapsible" Key Ring.

A Key Ring that does not buldge the pocket.

PRICE 0-3-0 each.

Rs. 2-0-0 per doz.

K. S. MUTHIAH & Co., Tinnevelly.

Forewarned is Forarmed!

Past, Present, Future!!

Accurate, Reliable, Genuine!!!

The Divine Science practised by the Hindu Sages of Ancient India:—Foretelling Prophesying.

My **Occult Art Studio**, *the premier in S. India, will answer your querries with remarkable success and exactitude.*

Therefore

Consult me in moments of anxiety and suspense. Send questions relating to Employment, Examination, Marriages, Patients etc., in a sealed envelope. Corrrect answers given without opening the cover. Governmental Theft and Testing questions not attended to. Give your star or date of birth or time of writing.

No Value Payable Post. Send remittance in advance.

Correspondence either in English or Tamil. Highest testimonials awarded. If our answers prove unsatisfactory and incorrect the amount will be refunded.

	INLAND (INDIA, BURMA & CEYLON.)	FOREIGN (STRAITS, F.M.S., S. AFRICA, ETC.)
Charges 1 to 6 question	Rs. 2	Rs. 3
Each question above six	0-8	Rs. 1
One year Life Reading	Rs. 3	Rs. 4
Five years Life Reading	Rs. 6	Rs. 7-8
Full Life Reading	Rs. 15	Rs. 20

For further particulars, please apply with stamped envelope for reply.

G. A. S. SASTRI,

BHARATH ASTROLOGICAL BUREAU,

Punalur, Travancore State (S. I. R.)

"பி. வி. ராஜன்" பட்டணம் பொடி.

நிகரற்றது! புகழ்பெற்றது!! மணமிகுந்தது!!!

உயர்ந்த புகையிலையினால் தேர்ந்த வேலைக்காரரைக்கொண்டு குணமும் மணமும் காரமும் வாசனையும் நீண்டநாள் கெடாததுமான "பட்டணம் பொடி" தயார்செய்து இந்தியா, பர்மா, சிலோன் முதலிய பல ஊர்களுக்கும் விசேஷமாக அனுப்பிக் கொண்டு வருகிறோம். எமது பொடியை தருவிக்கும் வியாபாரிகளும் வாடிக்கைக்காரர்களும் பரிபூரணமான திருப்தியை அடைந்து தமது சந்தோஷத்தைத் தெரிவித்து வருகின்றனர். எங்கள் பொடியின் குணவிசேஷத்திற்காக அநேக பொருட்காட்சி சாலைகளிலிருந்தும் ஏனைய டாக்டர்கள் கனவான்களிட மிருந்தும் முதற் றரமான நற் சாக்ஷி பத்திரங்களும் பொன் மெடல்களும் வந்திருக்கின்றன. ஒரு தடவை ஆர்டர்செய்து தருவித்து உண்மை அரியலாம். ஒரு வீசை "120 தோலா" பொடி கிரயம் ரூ. 3—10—0. ரெயில் அல்லது வி.பி. தபால் செலவு பிரத்தியேகம், அரை வீசை கால் வீசை ஒருசேர் டின்களாகவும் அநுப்பப்படும்.

டாக்டர் B. S. மல்லய்யா, M. B. & C, M. அவர்களால் பரிசோதிக்கப்பட்டு சன்மானிக்கப் பெற்றதும் பல யோக்யதா பத்திரங்களும் மெடல்களும் பெற்றதுமான எமது பிரஸித்திபெற்ற

R. S. சுகந்த மூக்குத்தூள்

இது நூதனமாய் ஆயுர்வேத வைத்திய முறைப்படி தயாரிக்கப் பட்டது. இதனை உபயோகிப்பதனால் ஜலதோஷம்,பீனிசம்,மண்டைகுத்தல், ஒற்றைத் தலைநோய், கண், மூளை, சம்பந்தமான நோய்கள் யாவற்றையும் உடனே போக்கி ஆனந்தமான பரிமளத்துட னிருக்கக்கூடியது.

புட்டி 1-க்கு	விலை அணு ரூ.	0	4	0
ஒரு டஜன் பாட்டில்	விலை ரூ.	2	4	0
சாம்பில் பாட்டில் டஜன் 1-க்கு	ரூ.	0	10	0
ஒரு சேர் 24 தோலா டின் 1-க்கு	ரூ.	1	12	0

தபாற் செலவு அல்லது ரெயில் செலவு பிரத்தியேகம்.

சிரேஷ்டமான ராஜன்ஸ் பரிமள வாசனை புகையிலை

வீசை 1-க்கு விலை ரூ. 1 12 0

சிறிய டின் டஜன் 1-க்கு ரூ. 1 14 C

மற்ற விவரங்களுக்கு கேட்லாக்கு தருவித்து பார்க்கவும்.

பி. வி. ராஜன் & கம்பெனி,
நெ. 44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,
மதராஸ்.

நவீன தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
உமர் பாக்ஷா	4	12	குணசுந்தரன்	1	4
கன்னிமுத்தம்	5	0	கல்பலதா	1	4
லண்டன் திருடர்	2	12	ஜீஜாபாய்	1	4
கற்பகசுந்தரி	2	12	வல்லப நாச்சியார்	4	1
சுந்தர்சிங்	1	8	அங்கையற்கன்னி	1	12
சித்திரரேகை	1	8	மாணிக்கவல்லி	1	0
கமலநாதன்	1	8	பரிமளா	1	0
மதனகாந்தி	1	8	மதிகெட்ட மனைவி	1	4
ஆநந்தமோஹன்	1	8	இராஜபுத்ர விஜயம்	1	4
லெக்ஷ்மிகாந்தன்	2	0	வித்யாசாகரர்	1	4
ஸ்ரீபாலன் பூபாலன்	1	12	சௌந்திர கோகிலம்	1	8
அமிர்த குமாரி	1	4	பத்மநாபன்	0	14
அமரநாதன்	1	4	ரெகுநாதன்	0	12
அமிர்தசாகரன்	1	4	ரெத்ன காந்தா	0	12
ஆத்மநாதன்	0	12	மர்மமுகி	0	12

விவரமான கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

லலிதா விலாச புஸ்தகசாலை,

திருவல்லிக்கேணி : மதராஸ்.

RING WORM

சர்வபடை சங்காரி.

இது எவ்வளவு நாள் பட்டதாகிலுமுள்ள படை, சொறி, சிரங்கு இவைகளை 24 மணி நேரத்தில் குணப்படுத்தும். உத்திரவாதம்.

விலை புட்டி 1-க்கு அணா 10. தபால் சிலவு வேறு.

துருவா அண்டு கோ.,

மதராஸ்.

ரப்பர் ஸ்டாம்பு செட்டுடன் ரூபா 2.



பித்தளை அரக்கு சீல் ரூபா 1.

ரப்பர் முத்திரை அரக்கு சீல், பிளாக்குகள் செய்ய தகுதியான இடம்

டி. ஜி. சுந்தரம் அண்டு கோ.,

223, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

கேட்லாக்கு எழுதி கேழ்க்கவும்.

அமிர்தாஞ்சனம்.

அமிர்தாஞ்சன்

அமிர்தாஞ்சன்

இருபத்தைந்து வருஷமாக லக்ஷக்கணக்காக விற்று வருகிறது. அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு அழகாய் பாக் செய்து, உபயோகத்துக்குத் தயாராய்,

எல்லா நோவுகளுக்கும்,

ஒரு கைகண்ட அவுஷதம் அமிர்தாஞ்சனமே தலைவலி, முதுகுவலி, கீழ் பிடிப்பு முதலிய எல்லா நோவுகளையும் நொடிப் பொழுதில் தீர்க்கும்.

உடனே முந்துங்கள், அணா பத்துதான்.

அமிர்தாஞ்சன் டிபோ,

பம்பாய்,

7, தம்புசெட்டி வீதி, சென்னை.

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்து விடாதீர்கள்.

ஷர்ட்டு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரூ. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரூ. 6, 6-8. 8 கெஜம் 44" ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரூ. 7, 8.

வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

கோகர் ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபாற் பெட்டி 99, - - மதராஸ்.

நம்பிக்கையுள்ள வர்த்தகஸ்தலம்.

கம்பெனி

ஸ்தாபித்த வருஷம் 1900.

கராச்சி பட்டுப் புடவைகள்.

தற்கால நாகரீகத்திற்கேற்றது. அழகான சரிகைக்கரைகள். சகல விதமான கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1, 18 முழ புடவை 1க்கு ரூ. **55**.
நெ. 2, „ „ ரூ. **45**.

கராச்சி ரவிக்கை 1க்கு ரூ. 3-8.

பெரிய கேட்லாக் இனாம்.

கே. எஸ். முத்தையா கோ.,
சில்க் அவுஸ், காசி.
பிராஞ்சுகள்: சென்னை, திருநெல்வேலி.

Printed by M.A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.